N. Rajeswaran

கணக்கியல்

பங்குடைமைப் பயிற்சிகள்

N. RAJESWARAN.

COMMERCE RESOURCE CENTRE - JAFFNA.

சி. சிவராசா

N. Rajeswaran.

N.RAJESWARAN.
J/N.M.M.V.
A/L-90C.

கணக்கியல்

பங்குடைமைப் பயிற்சிகள்

(க. பொ. த. உயர்தரம்)

சி. சிவராசா B.Com, Dip. in Ed.
கல்வி அதிகாரி (வர்த்தகம்)
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

"வணிக வள நிலையம்"
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

1989

Title : **Pankudamai Paetzical**

Author : **S. Sivarajah**

Language : **Tamil**

Copyright : **Author**

Size : **1/8 Demy**

Publisher : **Commerce Resource Centre**
Dept. of Education – Jaffna

Printer : **Chettiar Press**
430 , K. K. S. Road – Jaffna

Subjict : **Accountancy**

Edition : **October 1989**

N.RAJESWARAN.

யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரின்

அணிந்துரை

''செல்நீடுவீர் எட்டுத் திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந் தீங்கு சேர்ப்பீர்''

என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் தமிழ் மொழி மூலம் பல் துறை நூல்களும் பெருகி வரும் இவ் வேளையில், ''கணக்கியல்'' என்னும் நூலை வணிக வள நிலையம் வெளிக் கொணர்வதில் வெற்றி கண்டுள்ளமை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

''கணக்கியல்'' என்னும் நூலில் படிமுறையாக அமைந்துள்ள கணக்குகள் யாவும், மாணவரின் தூண்டல் திறனை அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. கணக்கியல் துறையில் பல பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு இந் நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைவதுடன் ஆசிரியர்களுக்கும் ஒரு உசாத்துணை நூலாக அமைவதால் இது எல்லோரதும் பெரு வரவேற்பைப் பெறும் என்பது திண்ணம்.

வர்த்தகக் கல்வி அதிகாரி திரு. கி. சிவராசா அவர்கள் கணக்கியல் வர்த்தகத்துறையில் மிக்க ஈடுபாடுடையவர். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இத் துறையின் உயர்ச்சிக்கு அயராது உழைப்பவர், செயற்றிறன் மிக்கவர், உயர்தர வகுப்பில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் திறம்பட நடப்பதற்கு, '' கணக்கியல் '' என்னும் இப் பதிப்பு வெளிவருவது அவசியமும் அவசரமுமாகுமென உணர்ந்து இந் நூலை அவர் வெளியிட்டிருப்பதைப் போற்றுமலிருக்க முடியாது.

'' வணிக வள நிலையம் '' ஆரம்பித்து வர்த்தகத் துறைக்கு வலுவும் பொலிவும் சேர்த்தமை கண்டு மகிழ்ச்சி அடையும் இவ் வேளையில், இந் நிலையத்தின் மூலம் வர்த்தகமும் நிதியும், கணக்கியல், பொருளியல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து போன்ற பாடங்களை மேலும் வளப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இவற்றின் ஊற்றாக இந் நூல் போன்ற பல ஆக்கங்கள் பல்கிப் பெருக வேண்டும் என வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
யாழ் மாவட்டம்

1989-10-06

என்னுரை

விஞ்ஞான வளர்ச்சி கண்டுள்ள 20 ஆம் நூற்றாண்டில் நவீன தொழில் திறன்கள் விருத்தியடைந்து வரும் இவ் வேளையில் மாணவரின் அறிவுத் திறனுக்கேற்ற பல நூல்கள் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமை வெள்ளிடமலை. செயற்திறன் மிக்க கணக்கியலில் தகுந்த பயிற்சியுள்ள நூல்கள் தமிழ் மொழியில் இதுவரை உருவாக வில்லை. க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள் தமது அறிவுத் திறனை விருத்தி செய்யும் முனைப்புடையவர்களாக இருக்கின் றார்கள். அவர்களது நாட்டத்தை நிவர்த்தி செய்யும் நோக்கமாக '' வணிக வள நிலையம் '' தனது முதற் படைப்பாக ''கணக்கியல்'' என்ற நூலை வெளியிடுவது வரவேற்கக் கூடியதொன்றாகும்.

இந்நூலில் ஒவ்வொரு பயிற்சியிலும் நடைபெறும் கற்பித்தல்–கற்றல், தூண்டு தல்– துலங்குதல் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு ஒவ்வோர் அலகிலும் ஏறு நிரையில்பயிற்சிகள் அமைந்துள்ளது. இந் நூலிலுள்ள ஒவ்வொரு கணக்கு களும் மாணவரின் தன் முனைப்பைத் தூண்டக்கூடியதாகவும், உளப்

பாங்கை விருத்தி செய்யக்கூடியதாகவும் அமைந்துள்ளது. மாணவரை மதிப்பிடுவதற்கு உதவியாக சரியான விடைகள் 'வணிக வள நிலைய' உறுப்பினர்களால் தயாரித்துத் தந்துள்ளமை ஆசிரியர்கள் – மாணவர் களுக்கு ஒரு ஊன்று கோலாக அமையும்.

தொகுத்துக்கூறின் இந் நூல் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி, கணக்கீட்டுடன் தொடர்புடைய பல பரீட்சைகளுக்கும் உதவியாக இருப்பதால் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. எனவே கற்றல் – கற்பித்தலுக்கு உதவும் சாதனமாக யாவரும் இந் நூலை வர வேற்பார்கள் என்பதில் ஐயமில்லை, "வணிக வள நிலையம்" மூலம் இவ்விதமான பல நூல்கள் வெளிக் கொணர வேண்டுமென விரும்பு கிறேன்.

இந் நூல் பொலிவுடன் மிளிர உற்சாகம் அளித்த யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகா பெரியதம்பி அவர்களுக்கு முதற்கண் எனது இதயபூர்வமான நன்றியைக் கூறக் கடப்பாடுடை யேன். அத்துடன் பல வழிகளிலும் உதவி புரிந்த வர்த்தக ஆசிரிய ஆலோசகர்கள், வர்த்தக ஆசிரியர்கள். குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய செட்டியார் அச்சகத்தார் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் இவர்கள் பணி எனக்குக் கிட்டவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

'வணிக வள நிலையம்',
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1989-10-09

சி. சிவராசா
கல்வி அதிகாரி
(வர்த்தகம்)

உள்ளுறை

	பக்கம்
பங்குடைமை இறுதிக் கணக்குகள்	01
பங்காளர் சேர்தல்	24
பங்காளர் விலகல்	37
பங்காளர் சேரலும் விலகலும்	44
பங்குடைமை இறுதிக் கணக்குகள் - 2	48
பங்குடைமைக் கலைப்பு	73
பலவினப் பயிற்சிகள்	101
செய்கைகள்	116
விடைகள்	

N- Rajeswaran.

பங்குடைமை இறுதிக் கணக்குகள் — 1

1. சுதா, சுபா, சிவா ஆகிய மூவரும் பங்காளர்களாகப் பின்வரும் ஒப்பந்தத்துடன் துணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அ) இலாப நட்டம் 5 : 3 : 2 என்ற விகிதத்தில் பகிரப்படல் வேண்டும்

ஆ) மூலதன வட்டி வருட ஆரம்பத்தில் உள்ள தொகைக்கு 5% அனுமதிக்கப்படல் வேண்டும்

இ) சுபாவின் வீட்டின் ஒரு பகுதி வியாபாரம் தொடர்பாக பயன் படுத்துவதால் அவருக்கு மாதம் 200 ரூபா வாடகை கொடு படல் வேண்டும்

31-12-1979 இல் நிலுவைச் சமன்பாடு.

மூலதனம் :	சுதா		42 000
	சுபா		32 000
	சிவா		21 000
நடைமுறைக் கணக்கு :	சுதா	8 000	
	சுபா	6 000	
	சிவா		8 000
காணி கட்டிடம் கொள்வில			
(காணி 70 000)		145 000	
தளபாடம் கொள்வில		60 000	
காகிதாதிகள்		500	
மோட்டார் வான்		25 000	
தொலைபேசி		200	
மின்சாரம்		250	
காப்புறுதி		300	
சில்லறைச்செலவு		150	
வருமதி உண்டியல்		1 000	

சென்மதி உண்டியல்		20 000
பிரயாணச் செலவு	100	
சம்பளம்	450	
கூலி	200	
அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம்		500
பொதுச் செலவு	450	
பெற்ற கழிவு		4 500
கொள்வனவு	60 000	
கொடுத்த கழிவு	2 800	
சில்லறை வருமானம்		4 000
விற்பனை		1 58 500
வங்கி		2 000
உட்திரும்புகை	4 200	
வங்கிச் செலவு	1 200	
கணக்குப் பரிசோதனை	400	
கூ.சு.கட்டணம் கொடு. வேண்டியது 1-1-79		200
தொழிற்பயிற்சிக் கட்டணம்		15 000
பொது ஒதுக்கம்		10 000
காசு	5 200	
எடுப்பனவு : சுதா	1 000	
சுபா	500	
சிவா	800	
கடன் பட்டோர் கடன் கொடுத்தோர்	2 000	8 000
	3 25 700	3 25 700

பின்வருவனவற்றை கவனத்திற் கொள்க :

1) 31-12-79 இல் சரக்கிருப்பு 8 942/-

2) 31-12-79 இல் பின்வருவன அட்டுறுச் செலவாக இருந்தன

தொலைபேசிக் கட்டணம் 25/-

சம்பளம் 150/-

3) 31-12 79 இல் முடிவுறுத காப்புறுதி 75/-

4) சில்லறை வருமானத்தில் இன்னும் 500/- பெறப்படவில்லை

5) கடன்பட்டோரில் 100 ரூபாவை அறவிடமுடியாக் கடனாக பதி வழித்து மீதிக் கடன்பட்டோரில் 2% த்தை அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்க

6) பின்வருமாறு ஒரு வருடத்திற்கு பெறுமானத் தேய்விடுக

கட்டிடம் நேர்கோட்டு முறையில் 2%

தளபாடம் மாறுப்பாக முறையில் 5%

மோட்டார் வானுக்கு கொள்விலையில் 10%

தயாரிக்கவேண்டியது

அ) 31-12-79 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும்

ஆ) 31-12-79 இல் முடிவடைந்த வருடத்திற்கான நடை முறைக் கணக்கையும்

இ) 31-12-79 அன்றுள்ளபடி ஐந்தொகையையும் தயார்செய்க

2) ரஜனி, ரமணி, ரதினி என்போர் ஒரு பங்குடைமை தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 5:3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்வர்; ஆனால் ரதினியின் இலாபப் பங்கு வருடத்திற்கு 10000/- ரூபாவுக்கு குறைவாக இருக்க லாகாது எனவும், அப்படி ஏதேனும் குறைவு இருந்தால் அதை ரஜனியே முழுவதையும் ஏற்பார் எனவும் இணங்கப் பட்டுள்ளது. பங்காளரின் நிலையான மூலதனத்திற்கும், பற் றுக்கும் வருடத்துக்கு 10% வட்டி கணிப்பிடப்படவேண்டும். ரமணியும் ரதினியும் மாதாந்தம் சம்பளமாக முறையே 400 ரூபாவுக்கும் 300 ரூபாவுக்கும் உரித்துள்ளவர்களாவார்கள் ரஜனியின் வீட்டின் ஒரு பகுதி கடையாக உபயோகிக்கப்படு கிறது. அப்பகுதிக்குரிய வாடகை மாத மொன்றுக்கு 500/- ரூபா என ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

1986 யூன் 30 இல் பங்குடைமையின் புத்தகங்களிலிருந்து பின்வரும் பரீட்சை மீதி எடுக்கப்பட்டது.

மூலதனம்:	ரஜனி		50 000
	ரமணி		40 000
	ரதினி		30 000
	கொள்வனவும் விற்பனவும்	275 000	370 000
	சம்பளம்	28 200	
	ஊழியர் சேமலாபநிதி (ஊழியர் உதவுதொகை உட்பட)	4 500	
	அறவிடமுடியாக் கடன்	980	
	விளம்பரம்	8 000	
	கையிருப்பு 1-7-85ல்	25 000	
	கேள்வும் தீர்வையும்	10 000	
	அலுவலக உபகரணங்கள் (கொள்விலை 20 000)	16 000	
	ரதினியிடம் பெற்ற கடன்		10 000
	அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு 1-7-85ல்		3 000
	உள்வந்த வண்டிக் கூலி	4000	
	கூலி	1000	
	இயந்திரசாதனங்கள் (கொள்விலை 60 000)	32 000	
	கடன்பட்டோரும் கடன் கொடுத்தோரும்	24 000	37 600
	சில்லறை வருமானம்		4 500
நடைமுறைக் கணக்கு:	ரஜனி		2 080
	ரமணி	2 000	
	ரதினி		1 900
	முதலீடுகள்	9 000	
	முதலீட்டு வருமானம்		1.800
	ஒப்படைவான் (கொள் விலை 70 000)	48 000	
	வங்கி	12 000	

கழிவுகள் (பெற்ற கழிவு 150/- ரூபாவை நீக்கிய பின்)	600	
நாளுவித செலவுகள்	14 000	
பங்காளர் எடுப்பனவுகள்	21 600	
நன்மதிப்பு	15 000	
	550 880	550 880

கணக்குகள் தயாரிக்கும்போது பின்வருவன கவனத்திற் கொள்ளப் பட வேண்டும்.

1) 1986 யூன் 30 ஆம் திகதியில் கடையிலிருந்த கையிருப்பு கொள்விலையில் 39 200 ரூபாவென பெறுமானமிடப்பட்டது. ஆனால் அதே திகதியில் சந்தை விலையிலும் பார்க்க கொள் விலை 12% கூடுதலாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2) ஒப்படை விற்பனையின் பொருட்டு 30 000 ரூபா பெறுமதி யான பொருட்கள் இக்கால எல்லையில் அனுப்பப்பட்டுள்ளன. இச் சரக்குகள் யாவும் விற்பனை செய்யப்பட்டு, ஒப்படை கொள்வோன் தனக்குச் சேரவேண்டிய சகல கொடுப்பனவு களையும் கழித்துக் கொண்டு, சேறிய தொகையாக 42 000/-ஐ 28.6.86ல் கிடைக்கக்கூடியதாக பங்குடைமையின் வங்கிக் கணக் கிற்கு நேரடியாக அனுப்பிவைத்திருந்தார். இந்த நடவடிக் கைகளுக்கு பங்குடைமையின் ஏட்டில் எத்தகைய பதிவும் செய்யப்படவில்லை.

3) நாளுவித செலவுகளின் பகுப்பு பின்வருமாறுகும்.

ஒப்படைச்சரக்கு அனுப்பற் செலவு	3 000/-
ரஜனி பெற்ற வாடகை	2 500/-
ஒப்படைவான் - ரயர்கள்	7 000/-
விற்பனைத் தரகு	1 500/-
	14 000/-

4) சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவுக்கு ஊழியர் உதவு தொகையாக கழித்த பின்புள்ள தொகையே சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது.

225
4500 × 8/12
1800

சம்பளம் = 28200 + 1800 /-

ஊழியர் = 4500 - 1800
= 2700 /-

5) பங்காளர் எடுப்பனவுகளில் ரஜனி 800/- வை ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும், ரமணி ஒவ்வொரு மாதமும் 15-ம் திகதி 600/- வையும், ரதினி ஒவ்வொரு மாத முடிவிலும் 400/- வையும் பற்றிக் கொண்டனர்.

6) தேய்மானத்துக்கு பின்வருமாறு ஏற்பாடுசெய்க.

அ) இயந்திர சாதனங்கள் - நேர்கோட்டு முறையில் 5%

ஆ) ஒப்படைவான்கள் - நேர்கோட்டு முறையில் 10%

இ) அலுவலக உபகரணங்கள் நேர்கோட்டு முறையில் 10%

7) ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டை கடன்பட்டோரில் 8% ஆகச் சீராக்கஞ் செய்க.

8) நன்மதிப்பை முற்றுகப் பதிவழிக்குக.
பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

அ) 1986 யூன் 30ல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார, இலாபநட்டக்கணக்கு

ஆ) அத்திகதியிலுள்ளபடியான ஐந்தொகை

இ) 1986 யூன் 30 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளரின் நடைமுறைக் கணக்குகள்.
(நிரன் முறையில்)

3. றமேஸ், றியா, நவாஸ் ஆகிய மூவரும் ஓர் பங்குடைமையின் பங்காளர் ஆவர். அவர்களிடையே காணப்பட்ட பங்குடைமை உடன்படிக்கை பின்வருமாறு:

அ) இலாபநட்டங்களை றமேஸ், றியா, நவாஸ் முறையே 2: 2: 1 என்ற விகிதத்தில் பகிர்வர்.

ஆ) பங்காளர்களது நிலையான மூலதனத்திற்கு வருடம் 6% வட்டி வழங்கப்படுவதுடன், பற்றுக்களுக்கு ஆண்டுக்கு 4% வட்டிஅறவிடவேண்டும்.

இ) பங்குடைமை வியாபாரத்தில் வேலை செய்வதற்காக றமேஸ் மாதச் சம்பளமாக 1000 ரூபாவும், றியா மாதச் சம்பளமாக 800 ரூபாவும் பெறுவதற்கு உரிமையுடையவர் களாவார்.

ஈ) நவாஸின் சொந்தவளவில் வியாபார நிலையம் அமைந்து இருப்பதினால் அவருக்கு வருடாந்த வாடகையாக 6000 ரூபா வழங்கப்படவேண்டும்.

1987 மார்ச் 31 - ம் திகதி அவர்களது வியாபாரத்திலிருந்து பிரித்தெடுத்த பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

மூலதனம் – றமேஸ்		140 000
றியா		120 000
நவாஸ்		140 000
பொறித் தொகுதியும் பொறி		
விருட்சமும் (கொள் விலை)	200 000	
வியாபாரக் கடன் பட்டோர்	52 000	
கையிலுள்ள காசு	5 400	
அனுமதித்த கழிவுகள்	2 600	
ஆண்டுத் தொடக்கத்திலிருந்த		
கையிருப்பு	24 500	
வாகன ஓட்டச் செலவுகள்	6 500	
நடைமுறைக் கணக்கு - றமேஸ்	14 200	
றியா	10 500	
நவாஸ்	20 400	
றியா கடன்		30 000
5% முதலீடு	10 000	
கொள்வனவுகள்	460 000	
சுங்கத் தீர்வைகள்	11 500	
எடுப்பனவுகள்	18 000	
பலவினச் செலவுகள்	24 000	
காணியும் கட்டிடமும் (கொள் விலை)	268 000	
மோட்டார்வாகனம் (கொள்விலை)	250 000	
காப்புறுதி	6 500	
உட்சுமைக் கூலி	4 650	
சம்பளம்	32 000	
மின்சாரம்	10 575	
விளம்பரம்	15 200	
தேய்மான ஏற்பாடு 1-4-86ல்:		
பொறித்தொகுதி, பொறிவிருட்சம்		85 000

மோட்டார் வாகனம்		68 000
காணியும் கட்டிடமும்		50 000
கடன் கொடுத்தோர்		142 000
விற்பனைகள்		684 000
வெளிச்சுமைக்கூலி	17 400	
தொங்கற் கணக்கு		2 000
சில்லறை முற்பணக்காசு	1 240	
பெற்ற கழிவுகள்		3 000
வருமதியுண்டியல்	12 000	
சென்மதியுண்டியல்		3 000
வங்கி மீதி		10 165
	1 477 165	1 477 165

பின்வரும் மேலதிக தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

1) ஆண்டு முடிவில் வியாபார நிலையத்தில் இருந்த சரக்கிருப்பு கொள்விலையில் 140 900 ரூபாவென பெறுமானமிடப்பட்டது. இச்சரக்கினுள் 'அலெக்ஸ்' என்னும் ஒப்படை முகவர் ஒருவரிடமிருந்து ஒப்படை வியாபாரத்திற்கு என பெற்றுக் கொள்ளப்பட்ட 24 900 ரூபா பெறுமதியான சரக்கும் உள்ளடங்கும்.

2) கடன்பட்டோன் ஒருவனிடம் இருந்து 2000 ரூபாக் கடனை முற்றுகத் தீர்க்கும் பொருட்டு 1800 ரூபாவுக்கு ஓர் காசோலை ஒன்று பெறப்பட்டது. இக்காசோலை கடன்கொடுத்தோன் ஒருவனுக்கு அவனது 2100 ரூபாக் கணக்கை முற்றுகத் தீர்க்கும் பொருட்டு சாட்டுதல் செய்து கொடுக்கப்பட்டது. இக்காசோலை இறுதியாக வங்கியால் மறுக்கப்பட்டு கடன் கொடுத்தோனுல் அனுப்பப்பட்டு இருந்தது. மறுக்கப்பட்ட காசோலை சம்பந்தமாக ஏடுகளில் எத்தகைய பதிவுகளும் செய்யப் படவில்லை.

3) விளம்பர இருப்பான 2650 ரூபா இறுதிச் சரக்கிருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4) 1987 ஜனவரி 1-ம் திகதி றியாவினது திருமணத்தின்போது 6000 ரூபா பெறுமதியான பொருட்களை றமேஸ், நவாஸ் இருவரும் அன்பளிப்பு செய்து இருந்தனர். இது தொடர்பான பதிவுகள் ஒன்றும் ஏடுகளில் இல்லை.

5) பங்காளர்கள் பின்வருமாறு பற்றுக்கள் செய்துள்ளனர்.

a) றமேஸ் ஒவ்வொருமாத ஆரம்பத் திகதியிலும் 750 ரூபா வீதம்.

b) றியா ஒவ்வொருமாத நடுத் திகதியிலும் 500 ரூபா வீதம்.

c) நவாஸ் ஒவ்வொருமாதக் கடைசித் திகதியிலும் 250 ரூபா வீதம்.

6) பலவினச் செலவுகளின் பகுப்பாய்வு பின்வருமாறு:

றியாவின் சம்பளம்	4000 ரூபா
வியாபாரச் செலவுகள்	6000 ரூபா
குளிரூட்டி வாங்கியது (1-10-86ல்)	14000 ரூபா
	24000 ரூபா

7) தேய்மானத்துக்கான ஆண்டு ஏற்பாடு பின்வருமாறு:

a) பொறித்தொகுதி இயந்திரசாதனம் கொள்விலையில் 10%

b) காணியும் கட்டிடமும் குன்றும் நிலுவை முறையில் 15%

c) ஏனைய நிலையான சொத்துக்களுக்கு கொள்விலையில் 7½%

8) தொங்கல் கணக்கு மீதியானது பின்வரும் பிழைகளினால் ஏடுகளில் வித்தியாசத்தினை காட்டுகிறது.

a) கொள்வனவு நாளேடு 1000 ரூபாவினால் குறைத்தெழுதப் பட்டுள்ளது.

b) தபாற் செலவுக்காக கொடுக்கப்பட்ட 2000 ரூபா காசேட்டில் மட்டுமே பதியப்பட்டது.

c) வங்கி நிரலின் கொடுப்பனவுப் பக்கம் 5000 ரூபாவினால் குறைத்து மதிப்பிடப்பட்டது.

நீர் தயாரிக்க வேண்டியவை:

அ) 1987 மார்ச் 31-ல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு.

ஆ) 1987 மார்ச் 31-ல் உள்ளவாறான ஐந்தொகை.

இ) நிரல் வடிவில் பங்காளிகளின் நடப்புக் கணக்குகள்

4. கலா, மாலா, விமலா ஆகிய மூன்று பங்காளரும் பின்வரும் உடன்பாட்டிற்கு இணங்க பலசரக்கு மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

1) இலாபநட்டம் சமமாகப் பகிரப்பட வேண்டும்

2) மூலதனத்திற்கு வருடத்தின் ஆரம்ப மீதிக்கு 8% வட்டி கணிக்கப்பட வேண்டும்.

3) மூவரும் முறையே 400/-, 300/-, 200/- மாதாந்தச் சம்பளம் பெற உரிமையுடையவர்கள்.

4) பங்காளர் கடனுக்கு வட்டி பங்குடைமைச் சட்டத்தின் பிரகாரம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

5) மாலா இறுதி இலாபமாக வருடம் குறைந்தது 1 00 000 பெறல் வேண்டும். ஏதேனும் குறைவு ஏற்படுமிடத்து ஏனைய பங்காளர் தமது இலாப நட்ட விகிதத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அ) பின்வரும்விடயங்களை கருத்தில் கொண்டு 31-12-1988 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும்

ஆ) 31-12-88 இல் முடிவடைந்த காலத்து நடைமுறைக் கணக்கையும் (நிரன் முறையில்)

இ) 31-12-1988 இல் அன்றுள்ளபடி ஐந்தொகையையும் தயார் செய்க

31-12-1988 இல் பரீட்சை மீதி

மூலதனம்:	கலா		2 00 000
	மாலா		1 50 000
	விமலா		1 50 000
காணி கட்டிடம் தேறிய மீதி		2 60 000	
சரக்கிருப்பு 1-1-88		60 000	
நடைமுறைக் கணக்கு:	கலா		10 000
	மாலா		10 000
	விமலா		12 000
பொறி இயந்திர சாதனம் தேறியமீதி		3 80 000	

தளபாடம் பொருத்து தேறிய மீதி	1 65 000	
அலுவலக உபகரண மீதி	1 00 000	
கொள்வனவும் விற்பனையும்	5 00 000	9 26 000
கழிவுகள்	15 500	16 500
கடன்படுநர் கடன்கொடுநர்	70 000	68 000
அறவிடமுடியாக் கடன்	7 000	
உட்காவுகை	12 000	
சம்பளம்	36 600	
விளம்பரம்	3 400	
பொறி இயந்திர திருத்தச் செலவு	5 500	
வாடகை -கலா	7 500	
காகிதாதிகள்	10 000	
மாலா கடன்		150000
முதலீடு 10%	1 00 000	
வருமதியுண்டியல்	25 000	
நட்ட ஈடு	15 000	
புரள்வு வரி	7 500	
வெளித்திருப்பம்		15 000
விமலா பேரில் செலுத்திய வருமானவரி	8 000	
முதலீட்டு வருமானம்		7 000
சென்மதி உண்டியல்		41 000
அலுவலகச் செலவு	9 000	
வங்கிச் செலவு	9 600	
சில்லறைச் செலவு	5 400	
சில்லறை வருமானம்		12 500
விற்பனைச் செலவு	7 800	
மின்சாரம்	7 200	
பண்டகசாலை வாடகை	6 000	
பெற்ற தரகு		15 000
காசு	25 000	
வங்கி மீவரையல்		75 000
1-1-88 ல் நிலுவை மின்சாரம்		5 000
1-1-88 ல் முற்பணக் காப்புறுதி	5 000	
	18 63 000	18 63 000

1) 31-12-88 இல் சரக்கிருப்பு 78 160 ரூபா எனக் கணிப்பிடப் பட்டது.

2) விளம்பரச் செலவு 5 வருடங்களுக்குள் பதிவழிப்பதென 1-1-87 இல் தீர்மானிக்கப்பட்டது.

3) ரூபா 5 000 கொள்விலையுடைய சரக்கு விற்பனையின்றேல் திருப்பி அனுப்புக, என்ற நிபந்தனையிட்டு 15% விலை கூட்டிக் குறித்து அனுப்பிய சரக்கு 31-12-88 வரை விற்கப்படா திருந்தது

4) கடன்பட்டோர் மீதியில் 10% அறவிட முடியாக் கடனுக ஏற்பாடு செய்க. மீதியில் 2% தை கடன்பட்டோர் கழிவிற் கும் ஒதுக்கம் செய்க

5) கடன்பட்டோர் ஒருவர் 28-12-88 இல் 4300 ரூபாவுக்கான பணத்தை வங்கியில் செலுத்தியிருந்தார். அனுமதித்த கழிவு 200/- பெற உரிமையுடையவர். இதற்கான பதிவுகள் புத்த கங்களில் இடம் பெறவில்லை.

6) காசுப்பெட்டியை நேரடியாகக் கணக்கிட்டுப் பார்த்தபோது புத்தக மீதியைவிட 100 ரூபா குறைவாக இருந்தது.

7) வருடம் பின்வருமாறு பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்

கட்டிடம் மாருப்பாக முறையில் 4%
பொறி இயந்திர சாதனம் ஒடுங்கு பாக முறையில் 10%
தளபாடம் மாருப்பாக முறையில் 8%
31-12-87 வரை கழித்த பெறுமானத் தேய்வின் திரட்டுக்கள்
தளபாடம் 12 000/- இயந்திரம் 10 000/- கட்டிடம் 4 000/
(காணியின் கொள்விலை 1 64 000)

8) அலுவலக உபகரணமொன்று 30-12-88 இல் 200/- க்கு கொள் வனவு செய்யப்பட்டது. அதற்கான பதிவு புத்தகங்களில் இடம்பெறவில்லை.

9) கலாவின் வீடொன்று பங்குடைமை வியாபாரத்திற்காக பயன் படுத்தப்பட்டது இதற்கு மாதம் 1000/- வாடகை தருவ தாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

10) 31-12-88 இல் மின்சார நிலுவையாக 100 ரூபாவும் முற்பண காகிதாதிகள் 1 500 ரூபாவும் இருந்தது.

5. இராமன், பரதன், இலக்குமணன் ஆகிய மூவரும் இலாப நட்டங்களை 2 : 1 : 1 என்னும் விகிதத்தில் பகிர்கின்றனர். 31-12-86 இல் அவர்களின் பரீட்சைமீதி வருமாறு :

மூலதனம் :	இராமன்		40 000
	பரதன்		25 000
	இலக்குமணன்		15 000
கொள்வனவு - விற்பனை		184 600	274 600
கட்டிடங்கள் (கொள்விலை)		60 000	
குத்தகை ஆதனங்கள் (கொள்விலை)		40 000	
உயர்தொழில் முறைக் கட்டணம்		4 050	
காப்புறுதி மின்சாரம்		2 700	
அறவிடமுடியாக் கடன்		250	
கடன் பட்டோர் கடன் கொடுத்தோர்		13 000	9 400
ஐயக்கடன் ஒதுக்கம்			600
நன்மதிப்பு ஆக்கவுரிமை		6 000	
விளம்பரம்		920	
கணிப்பாளர் ஊதியங்கள்		1 080	
இறை நீர்வரி		750	
விற்பனையாளர் சம்பளம்		1 250	
பற்றுக்கள் :	இராமன்	4 050	
	பரதன்	950	
வங்கி மீவரையல்			2 600
வருமான வரி		1 200	
பொது ஒதுக்கம்			7 400
பூர்வாங்கச் செலவு		1 800	
சட்டமுறைச் செலவு		2 000	
ஆரம்பக் கையிருப்பு 1-1-86		14 200	
கொள்வனவு செலவுகள்		2 800	
தளபாடப் பொருத்துக்கள்		40 000	
சென்மதி உண்டியல்			7 000
		381 600	381 600

பங்காளரின் ஒப்பந்தங்கள் வருமாறு :

1) ஆரம்ப மூலதன மீதிக்கு ஆண்டு வட்டி 4%

2) இராமன், பரதன் முறையே மாதச் சம்பளமாக 700/-, 800/- பெற உரிமை உடையவர்கள்

3) பற்றுக்கு வட்டி இல்லை

4) பங்குடைமையின் உபயோகத்திற்கு கட்டிட வளவினை பயன் படுத்த அனுமதித்ததற்காக பரதனுக்கு ஆண்டு வாடகையாக 1800 ரூபா செலவு வைக்கப்படும்

சிராக்கங்கள் :-

அ) 31-12-86 இல் இறுதிப் பட்டோலைகளின் கொள்விலை 12 800/- ஆகவும் அதன் சந்தைப் பெறுமானம் 12 200/- ஆகவும் காட்சியளித்தது

ஆ) அட்டுறு இறைகள் 240/- ஆகவும் முடிவுறுத சட்டமுறைச் செலவுகள் 300/- ஆகவும் காணப்பட்டது

இ) 27-12-86 இல் கொள்வனவு செய்த 6 500 ரூபாப் பண்டங்கள் இன்னமும் வழிப்பொருளாக உள்ளது

ஈ) உயர் தொழில் முறைக் கட்டணங்களில் குத்தகையாதன வளவு சம்பந்தமான 1 500/-அடங்கியுள்ளது. இது முதலாக்கப் பட்டு குத்தகையாதனம் 10 ஆண்டுகளில் பதிவழிக்கப்பட வேண்டும்

உ) நிதியாண்டில் 4 800/- பொருட்கள் தீயால் அழிந்தன. இதில் 60 % த்தை காப்புறுதி ஸ்தாபனம் தருவதாக சம்மதித்தது

ஊ) அறவிடமுடியாக் கடனுக பதிவழித்த 50 ரூபா மீளப் பெறப்பட்டது. இவ் வருடம் கடன்பட்டோரில் 2% த்தை அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்க

எ) கடன்பட்டோர் மீதி 12 400 ரூபாவாக இருக்கத்தக்கதாக அறவிடமுடியாக் கடனைப் பதிவழிக்குக

ஏ) வருமானவரி பரதனுக்கு உரியது

ஐ) தேறிய இலாபத்தில் 10% தினை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுக

ஒ) பின்வருமாறு தேய்விடுக :

கட்டிடத்திற்கு மீதிக்கு 5% (ஆண்டுக்கு)

தளபாட மீதிக்கு 2% (ஆண்டுக்கு)

நீங்கள் தயாரிக்க வேண்டியவை :

31-12-88 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் க/கு

31-12-88 இல் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக் கணக்கு

31-12-88 இல் அன்றுள்ளபடி ஐந்தொகை

6. சாந்தன், மோகன், மகிந்தன் ஆகிய மூவரும் ஓர் வியாபாரத்தில் பங்காளிகளாக இருந்து இலாபநட்டங்களை முறையே 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்கின்றனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை வருமாறு:

1) ஆரம்ப மூலதன மீதிகளுக்கு ஆண்டு வட்டி 4%

2) பற்றுக்கு வட்டி இல்லை.

3) மேலதிக கடனுக்கு ஆண்டு வட்டி 7% வழங்கப்பட வேண்டும்

31-12-88 இல் எடுக்கப்பட்ட நிலுவைச் சமன்பாடு

விபரம்		வரவு	செலவு
1-1-88 இல் இருப்பு		25 625	
நடைமுறைக் கணக்கு	சாந்தன்	17 875	
	மோகன்	5 500	
	மகிந்தன்		10 000
மூலதனக் கணக்கு	சாந்தன்		60 000
	மோகன்		70 000
	மகிந்தன்		80 000

தரகு		2 575	5 000
நில்லறை வருமானம்			13 000
வாடகை		1 865	2 000
கழிவு		3 935	2 000
அஞ்சல் செலவு		2 950	
விளம்பரம்		17 850	
மின்சாரம்		6 250	
உட்சுமைக்கூலி		2 000	
காப்புறுதி		87 50	
கொள்வனவு விற்பனை		2 00 823	3 60 896
இறை		9 973	
கப்பல் கட்டணம்		7 500	
திருப்பல்		1 000	5 000
நன்மதிப்பு		15 000	
காணிகட்டிடம் (கொள்விலை)		80 000	
தளபாடம் (கொள்விலை)		40 000	
மோட்டார் லொறி (கொள்விலை)		50 000	
கடன் பட்டோர் கடன் கொடுத்தோர்		1 00 000	80 000
அறவிட முடியாக் கடன் ஒதுக்கம்			3 000
வெளிச் சென்ற வண்டிக் கூலி		4 000	
தளபாடத் திருத்தச் செலவு		6 000	
காசு		40 000	
வங்கி		60 000	
அறவிடமுடியாக்கடன்		10 000	
உண்டியல்		10 000	21 000
பிரயாணச் செலவு		17 000	
தபால் செலவு		3 000	
வருமானவரி		10 000	
தேய்வொதுக்கம் 1-1-88 : கட்டிடம்			10 000
	தளபாடம்		5 000
	மோட்டார்		5 000
பற்று:	சாந்தன்	4 675	
	மோகன்	2 875	
	மகிந்தன்	1 875	
மோகன் கடன்			40 000
பாலன் கடன்			20 000
பூர்வாங்கச்செலவு		20 000	
சுங்கத்தீர்வை		3 000	
		7 91 896	7 91 896

பின்வரும் தகவல்கள் உமக்குக் கொடுக்கப்படுகின்றன.

அ) இறுதி இருப்பானது 31-12-88 இல் 20 000 ரூபாவாகவும் அதன் சந்தைப் பெறுமானம் 16 000 ரூபாவாகவும் காணப் பட்டது.

ஆ) வருமானவரி சாந்தன், மோகன் முறையே 6:4 என்ற விகி தத்தில் ஏற்கப்பட வேண்டும்.

இ) கடன்பட்டோரில் 5 000/- நட்டக் கடனாக பதிவழிப்பது டன் ஐயக்கடன் ஒதுக்கத்தை 4% மாக சீராக்குவதுடன் கடன்பட்டோர் கழிவொதுக்கத்தை 2% ற்கு ஏற்பாடு செய்க

ஈ) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
காணி கட்டிடம் 10% (நேர் கோட்டு முறையில் காணியின் கொள்விலை 25 000/-)
தளபாடம் 5% (மாறுப்பாக முறையில்)
மோட்டார் 5% (ஒடுங்கு பாக முறையில்)

உ) 01 யூன் 85 இல் 10 000/- இற்கு கொள்வனவு செய்த தள பாடம் ஒன்றை மகிந்தன் வருட இறுதியில் 8 500 ரூபாவிற்கு ஏற்றுக் கொண்டார்

ஊ) அட்டுறு காப்புறுதி 400/- ஆகவும் முடிவுருத மின்சாரம் 1 000/- ஆகவும் காணப்பட்டது.

எ) பூர்வாங்கச்செலவு 10% பதிவழிக்கப்படல் வேண்டும்.

ஏ) விளம்பரத்தில் 25%ஐ கணக்குப் பரிசோதனைக் கட்டணத் திற்கு மாற்றுக

ஒ) அலுவலக உபகரணம் 30 000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கான பதிவுகள் இடம் பெறவில்லை.

ஒள) தேறிய இலாபத்தில் 10% பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றுக.

தயார் செய்க

31-12-88 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் கணக்கு
31-12-88 இல் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக் கணக்கு
31-13-88 அன்றுள்ளபடி ஐந்தொகை

7. பாலன், நேசன் ஆகிய இருவரும் உற்பத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் ஒரு பங்குடைமையில் பங்காளராவர். இவர்களிடையே பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு :

அ) இலாப நட்டம் 3 : 2 என்ற விகிதத்தில் பங்கிடுதல் வேண்டும்

ஆ) பங்காளரின் பற்றிற்கு பற்றப்படும் காலத்திற்கு வருடம் 12% வட்டி கணிக்கப்படல்

இ) பாலன் மாதாந்தம் 250 ரூபாவையும் நேசன் மாதாந்தம் 350 ரூபாவையும் சம்பளமாகப்பெற உரித்துடையவர்கள்

31-12-87 இல் இப் பங்குடைமையின் நிலுவைச் சமன்பாடு பின்வருமாறு :

மூலதனம் : பாலன்		1 20 000
நேசன்		80 000
நடைமுறைக் கணக்கு: பாலன்	2 000	
நேசன்		11 000
விற்ற சரக்கின் கொள்விலை	1 90 000	
முதலீடுகள்	50 000	
விற்பனை		3 75 000
வெளிக்காவு கூலிகள்	2 000	
வியாபாரக் கடன்படுநர்	19 200	
வருமதி உண்டியல்கள்	8 700	
இருப்பு: மூலப்பொருள்	14 600	
முடிவுற்ற பொருள்	27 400	
உருவாகும் பொருள்	4 800	
காசு மீதி	4 400	
வியாபாரக் கடன் கொடுநர்		13 900
பங்காளர் சம்பளம் : பாலன்	1 800	
நேசன்	1 800	

வங்கி மீதி		3 400	
ஐயக்கடனுக்கு ஏற்பாடு			300
பொறி இயந்திர சாதனம்		1 60 000	
மோட்டாரூர்திகள்		1 20 000	
தளபாடங்கள்		20 000	
தேய்வொதுக்கங்கள் :			
பொறி இயந்திரம்	31-12-87		30 000
மோட்டார் வாகனம்	31-12-87		40 000
பங்காளர் பற்றியவை:	பாலன் 1-1-87	4 000	
	நேசன் 1-4-87	2 000	
விற்பனைத் திரும்பல்		1 500	
நேசன் கடன் கணக்கு			15 000
நிலையச் செலவுகள்		22 600	
விநியோகச்செலவுகள்		22 300	
நிதிச் செலவீடுகள்		2 700	
		6 85 200	6 85 200

பின்வரும் மேலதிக தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன

1) முடிவுற்ற பொருட்களில் 30-6-87 இல் பாலன் 3 000 ரூபா பெறுமதியானவற்றையும் நேசன் 30-9-87 இல் 2 500 ரூபா பெறுமதியானவற்றையும் சொந்தத் தேவைக்காக எடுத்திருந்த போதும் இதற்குப் பதிவுகளேதும் இல்லை

2) மோட்டார் வாகனம் நேர்கோட்டு முறையில் 5% பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்

3) கடன் வருமதியாளரில் 8 000 ரூபா தரவேண்டிய ஒருவர் அதில் 50% பெறுமதிக்கு ஒரு உண்டியலை ஒப்புக்கொண்ட போதும் இதற்குப் பதிவுகள் செய்யப்படவில்லை

4) ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோரில் 4% மாக்கப்படல் வேண்டும்

5) தளபாடத்திற்கு நேர்கோட்டு ரீதியில் 2% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்

6) விளம்பரச் செலவு 600 ரூபா அலுவலக மின் கட்டணம் 400 ரூபா நிலுவையாக உள்ளது

7) நிறுவனத்தில் இருந்து 9 000 ரூபாவிற்கு கொள்வனவு செய்த வாடிக்கைக்காரன் இதனைத் திருப்பியனுப்பியிருந்தான். இச் சரக்கு களவாடப்பட்டது. காப்புறுதித் தாபனம் தர ஒப்புக் கொண்ட 80% தொகைக்கு 20-12-87 இல் காசோலை தந்த போதும் வருட இறுதிவரை இவை எதுவும் கணக்கேடுகளில் காட்டப்படவில்லை. நிறுவனம் கொள்விலையுடன் 25% இலாபம் வைத்தே பொருட்களை விற்கின்றது

8) தளபாடம் 1-9-87 இல் வாங்கப்பட்டதாகும்

தயாரிக்குக :

1) 31-12-87 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய இலாப நட்டக் க/கு

2) 31.12-87 இல் உள்ளவாறான ஐந்தொகை

3) பங்காளர் நடைமுறைக் கணக்கு

8. ரகு, வரதன், லிங்கன் என்னும் பங்காளர் ஒரு உற்பத்தி வியாபார முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் பங்குடைமை உற்பத்தி வியாபாரத்தை அமைத்தபோது பின்வருமாறு இணங்கிக் கொண்டனர்.

1) மூலதன மீதிக்கு ஆண்டுக்கு 5% வட்டி வழங்குவதென்றும்

2) வரதன் உற்பத்தியை மேற்பார்வை செய்வதனால் அவன் மாதம் 200/- சம்பளம் பெற உரிமை உடையவனென்றும்

3) இலாப நட்டம் 2: 2: 1 என்ற விகிதத்தில் பகிர்வதெனவும்

4) பங்காளர் பணங்களை பற்றுவதற்கு உரிமை உடையவர்கள் எனவும் இணக்கங் காணப்பட்டது.

31-3-89ல் பரீட்சை மீதி வருமாறு:

காணி கட்டிடம் (காணி 80000 கொள் வீலை)	2 80 000	
மோட்டார்வாகனம் (கொள்வீலை)	1 40 000	
பற்று – ரகு	728	
கடன்பட்டோர் கடன் கொடுத்தோர்	37 325	42 200
விளம்பரம்	8 200	
காணி கட்டிட தேய்மான ஏற்பாடு		120 000
மோட்டார்வான் தேய்வு ஏற்பாடு		60 000
அறவிடமுடியாக் கடன்	8 500	
சுங்கத்தீர்வை	9 000	
கழிவு	4 350	1 250
எழுது கருவி	4 500	
தேறுத இலாப ஏற்பாடு		4 000
மூலப்பொருள் கொள்வனவு	1 36 415	
தொழிற்சாலை உத்தியோகத்தர் வேதனம்	1 500	
பரும்படிக் கூலி	3 750	
விற்பனை		3 27 468
வங்கி		22 425
சக்தி எரிபொருள்	375	
நடைமுறைக் கணக்கு : ரகு	6 000	
வரதன்	4 200	
லிங்கன்		3 500
ஐயக்கடன் ஏற்பாடு		1 000
முதலீட்டு வருமானம்		3 000
ஆரம்ப மூலப்பொருள்	50 000	
புத்துருவாகும்வேலை	23 000	
முடிவுப்பொருள்	24 000	
5% முதலீடு	75 000	
வாடகை (காரியாலயத்திற்கு)	7 500	

தளபாடம் (கொள்விலை)		1 00 000	
பொறி இயந்திரம் (கொள் விலை)		2 00 000	
குத்தகையாதனம்		1 00 000	
காப்புறுதி		8 000	
சம்பளம்		1 500	
சில்லறை வருமானம்			750
மூலதனம்:	ரகு		2 50 000
	வரதன்		2 00 000
	லிங்கன்		1 00 000
தேய் மான ஏற்பாடு 1. 4. 88:	தளபாடம்		25 000
	பொறி இயந்திரம்		75 000
கொள்வனவுக் கூலி		1 750	
		12 35 593	12 35 593

கீழ்வரும் தகவல்கள் உமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது

அ) 31. 3. 89 இல்: மூலப்பொருள் 5 718/-
முடிவுப்பொருள் 40 325/-
புத்துருவாகும் வேலை 10 340/-

ஆ) காப்புறுதியில் 10% அலுவலகத்திற்குரியது

இ) உற்பத்திச் செலவில் 20% இலாபம் வைத்து வியாபாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

ஈ) கொடுக்க வேண்டியவை: பரும்படிக் கூலி 350/-
எரிபொருள் 25/-

உ) முடிவுறுத காப்புறுதி 150/-

ஊ) ரகு பிரயாணச் செலவாக 150 ரூபாவை தனது சொந்தப் பணத்திலிருந்து எடுத்துக் கொடுத்தார்

எ) பின்வருமாறு ஆண்டுக்கு தேய் விடவேண்டும்

கட்டிடம் நேர்கோட்டு முறையில் 5%

மோட்டார் வாகனம் குறைந்து செல் மீதியில் 10%

தளபாடம், பொறி இயந்திரம் ஒடுங்குபாக முறையில் முறையே 5% 10% தேய்விடுக

ஏ) 1. 10. 86 இல் கொள்வனவு செய்த பொறி இயந்திரமொன்று 40 000 பெறுமதி மதிப்பிட்டு (கொள் விலை 50 000/-) A நிறுவனத்திடம் கொடுத்து 65 000 ரூபா பெறுமதியான புதிய பொறி இயந்திரம் 31.3.89 இல் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கான பதிவுகள் புத்தகங்களில் இடம்பெறவில்லை.

ஐ) கடன்பட்டவர் ஒருவர் 5000 ரூபாவுக்கு உண்டியலொன்றை ஒப்புக் கொண்டுள்ளார்.

ஒ) வரதன் வாராந்தம் 50/- பெறுமதியான பொருட்களையும் லிங்கம் மாதாந்தம் 200/- பெறுமதியான பொருட்களையும் தமது சொந்தத் தேவைக்காக எடுத்துள்ளனர்.

31-3-89 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய உற்பத்தி வியாபார இலாபநட்டக் கணக்கையும் பங்காளர் நடைமுறைக் கணக்கு (நிரன் முறையில்) 31-3-89 இல் அன்றுள்ளபடி ஐந்தொகை.

பங்காளர் சேர்தல்

1. கறுப்பனும் வெள்ளையனும் இலாபநட்டத்தை 3:2 எனப்பகிரும் பங்காளராவர்.

31-12-87 இல் ஐந்தொகை

மூலதனம்

கறுப்பன்	50 000	நிலையான சொத்து	80000
வெள்ளையன்	40 000	சரக்கிருப்பு	20 000
பொது ஒதுக்கம்	12 000	முதலீடு	6 000
5% வங்கிக்கடன்	8 000	கடன்பட்டோர் 6 000	
கடன் கொடுத்தோர்	20 000	அ. மு. க. ஒ 400	5 600
		காசு	18 400
	130 000		1 30 000

1-1-88 இல் சிவலை என்பவன் ¼ பங்கு இலாபம் பெறுவதற்கு இணங்கி இப்பங்குடைமையில் சேர்கின்றான். மூலதனமாக 30 000 ரூபா கொண்டு வந்தான். வியாபாரத்தின் நன்மதிப்பு 12 000 ரூபா என மதிப்பிடப்பட்டது.

பின்வரும் முறைகளில் குறிப்பேட்டுப் பதிவையும் சிவலை சேர்ந்தபின் உள்ள ஆரம்ப ஐந்தொகையையும் தயார் செய்க

1) சிவலை நன்மதிப்புத் தொகையைச் காசாகக் கொண்டுவந்தான் எனக் கொண்டும்

2) சிவலை தரும் நன்மதிப்புத் தொகையை பழைய பங்காளர் பற்றிக் கொண்டனர் எனக் கொண்டும்

3) சிவலீல நன்மதிப்புத் தொகையைக் காசாகத் தராதபடியால் கணக்கில் பதிவதற்கு இணங்கினர்.

4) சிவலீல சேரும் போது நன்மதிப்பு கணக்கிடப்பட்டது. ஆனல் கணக்கில் பதிவதில்லை எனக் கொண்டும்.

2. இராமன் என்னும் ஒரு சில்லறைவியாபாரியின் 31-12-88 இல் இருந்த ஐந்தொகை பின்வருமாறு.

மூலதனம்	24 000	நிலையான		
கடன் கொடுத்தோர்	12 000	சொத்து	43 750	
வங்கிமேலதிகப்பற்று	29 750	கழி:தேய்வு	6 250	37 500
		வியாபாரச் சரக்கு		22 000
		வி. கடன்பட்டோர்		6 250
	65 750			65 750

இராமனுடன் இலக்குமணன் என்பவன் பங்காளனுக சேர்கிறன். இலக்குமணனை பங்காளனுக ஆக்குவதற்கு பின்வரும் மாற்றுத் திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

அ) இலக்குமணன் 12 000 ரூபாவை மூலதனமாகக் கொண்டு வரவேண்டும். அதில் 7 500 ரூபாவை நன்மதிப்புக்கென இராமன் எடுத்து தனது கணக்கில் செலவு வைக்க வேண்டும்.

ஆ) நன்மதிப்புக்காக இராமனுக்கு 20 000 ரூபாவை செலவு வைப்பதுடன் இலக்குமணன் இராமனின் மூலதனத்தில் 50% தினை காசாக கொண்டு வரவேண்டும்.

பின்வருவனவற்றை தயாரிக்குக

1) மேற்குறிப்பிட்ட திட்டங்களிலொன்று நடைமுறைப்படுத்தப் படும் போது கணக்குகளில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் வகையில் ஒவ்வொரு திட்டங்களுக்கும் ஐந்தொகைகளைத் தயாரிக்குக

2) இராமன், இலக்குமணன் ஆகியோரிடையே இலாபநட்ட பகிர்வு $\frac{2}{3} : \frac{1}{3}$ என்ற வகையில் ஏற்கப்பட்டிருக்கிறதென கருதி, இந் நிலையில் எத்தகைய மாற்றுத் திட்டத்தினை தெரிவு செய்ய வேண்டுமென இலக்குமணனுக்கு நீர் எவ்வாறு ஆலோசனை கூறுவீர்

3. பாலனும், குமரனும் இலாப நட்டத்தை 2:1 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்கள். 31-12-86 இல் அவர்களுடைய ஐந்தொகை பின்வருமாறு

31-12-86 இல் ஐந்தொகை

மூலதனம்			
பாலன்	30 000	கட்டிடம்	15 000
குமரன்	20 000	தளபாடம்	10 000
க. கொடுத்தோர்	6 000	தட்டச்சு	15 000
		கடன் பட்டோர்	10 000
		சரக்கிருப்பு	3 000
		காசு	3 000
	56 000		56 000

31-12-86 இல் சுதன் இலாபநட்டத்தில் $\frac{1}{3}$ பங்கு பெறும் உரிமையுடன் சேர்க்கப்பட்டார். அவர் வரும்போது 10 000/- மூலதனமாகவும் 5 000/- நன்மதிப்பாகவும் கொண்டு வரல் வேண்டும். நன்மதிப்புத் தொகையைப் பழைய பங்காளர்கள் தமது இலாப நட்ட விகிதப்படி பங்கிட்டுக் கொண்டார்கள். அன்றைய திகதியில் கட்டிடம் 18000/- ஆகவும் தளபாடம் 8 000- ஆகவும் சரக்கிருப்பு 2 000/- ஆகவும் விலைமதிக்கப்பட்டது.

மேற்கூறிய விபரங்களில் இருந்து மறுபடி விலைமதித்தல் கணக்கையும், புதிய பங்காளனை சேர்த்த பின் உள்ள ஐந்தொகையையும் தயார் செய்க

4. இலாபநட்டத்தை 3:2 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளரான ரமணன், குமணன் ஆகிய பங்குடைமை வியாபாரிகளினது 31-12-86 இல் உள்ளவாறான ஐந்தொகை வருமாறு.

மூலதனம் : ரமணன்	57 000	காணிகட்டிடம்	52 000
குமணன்	34 000	இயந்திரம்	32 000
க. கொடுத்தோர்	13 000	வருமதியாளர்	10 000
சென்மதி உண்டியல்	5 000	காசு	15 000
	109 000		109 000

1-1-87 இல் பின்வரும் நிபந்தனைகளுடன் பற்குணன் என்பவர் பின்வரும் பங்காளராக சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்.

1) நன்மதிப்பு விலை 5 000 ரூபாவாக மதிப்பிட்டு அத்தொகையை புதிய பங்காளன் காசாக கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபடுத்துவது எனவும்

2) காணிகட்டிடம், இயந்திரம் முறையே 56 000, 31 000 ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டது.

3) பற்குணன் 30 000 ரூபாவை மூலதனமாகவும் இலாபத்தில் $\frac{1}{5}$ பங்கு உரிமையுடனும் சேர்க்கப்படுகிறார்.

4) வருமதியாளரில் 5% அறவிடமுடியாக்கடனுக்கு ஒதுக்கம் செய்யவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தயார்செய்யப்பட வேண்டியன .

அ) மறுபடி விலை மதிப்பு கணக்கு

ஆ) பங்காளர் மூலதனக் கணக்கு

இ) புதிய ஐந்தொகை

5. கம்பன், கபிலன் ஆகியோர் 2 : 1 என்ற இலாப நட்டப் பகிர்வு விகிதப்படி பகிரும் பங்காளராவர். இவர்களின் 30-6-86 இல் உள்ளபடியான ஐந்தொகை பின்வருமாறு :

மூலதனம் :

கம்பன்	75 000		காணி		
கபிலன்	60 000	1 35 000	கட்டிடம்	65 000	
பொது			— பெ. தே.		
ஒதுக்கம்		18 000	ஒதுக்கம்	15 000	50 000
கடன்			தளபாடம்	20 000	
கொடுத்தோர்		22 000	— பெ. தே.		
			ஒதுக்கம்	4 000	16 000
			முதலீடு		14 000
			சரக்கிருப்பு		40 000
			கடன்		
			பட்டோர்	33 000	
			— அ மு க		
			ஒதுக்கம்	3 000	30 000
			வங்கி		25 000
		175 000			1 75 000

1-7-86 இல் நக்கீரரை பங்குடைமையில் பங்காளராகப் பின் வரும் நிபந்தனையில் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்தனர்

1) புதிய பங்காளர் மூலதனமாக 50 000/- கொண்டுவருதல் வேண்டும்

2) நிறுவனத்தின் இலாப நட்டத்தில் $\frac{1}{4}$ பங்கைப் பெறும் உரிமையுடன் நக்கீரர் சேர்க்கப்படுவார்

3) நன்மதிப்பிற்கு 18 000 ரூபாவிற்கு கணக்கொன்றை ஆரம்பித்தல் வேண்டும்

4) சொத்துக்கள் பின்வருமாறு மறுபடி விலை மதிக்கப்பட்டன

காணி கட்டிடம்	52 000/-
தளபாடம்	13 000/-
சரக்கிருப்பு	39 000/-
கடன்பட்டோர்	29 000/-

பின்வருவனவற்றைத் தயாரிக்குக :

1) மறுபடி விலைமதித்தல் க/கு

2) பங்காளர் மூலதனக் க/கு

3) புதிய ஐந்தொகை

6. இந்திரன், சந்திரன் என்ற பங்குடைமை வியாபாரிகளின் 31-12-87 ஆம் திகதிய ஐந்தொகை வருமாறு :

மூலதனம்		சொத்துக்கள்	
இந்திரன்	25 000	காணி, கட்டிடம்	10 000
சந்திரன்	15 000	இயந்திரம்	12 000
ந. மு. க/கு:		தளபாடம்	18 000
இந்திரன்	5 000	க. பட்டோர்	7 000
சந்திரன்	2 500	சரக்கிருப்பு	5 000
க கொடுத்தோர்	2 000	வங்கி	2 000
ஈட்டுக்கடன்	10 000	நன்மதிப்பு	5 500
	59 500		59 500

31-12-87 இல் கஜேந்திரன் என்பவரை புதிய பங்காளராகச் சேர்க்க உடன்பட்டனர். கஜேந்திரன் மூலதனமாக 10 000/- வைக் கொண்டுவர வேண்டும், காணி கட்டிடம் 15 000/- இயந்திரம் 10 000/- தளபாடம் 15 000/- கடன் பட்டோர் 6 000/- சரக் கிருப்பு 10 000/- ஆகவும் விலைமதிக்கப்பட்டது.

அத்திகதியில் நன்மதிப்பின் விலை 8000/- ஆக மதிப்பிடப்பட்டு அதிகரித்த நன்மதிப்பில் 50% ஐ கஜேந்திரன் பணமாக கொண்டுவர உடன்பட்டார். மீதியை நன்மதிப்புக் க/கில் சேர்க்கவும் உடன் பட்டார், எனக்கருதிக்கொண்டு 31.12.87ல் உள்ள புதிய ஐந்தொ கையைத் தயார் செய்க.

7. ஞானன், கண்ணன் ஆகியோர் 5; 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டு ஒரு பங்குடைமையை நடாத்தி வந்தனர். அரவிந்தன் என்பவரை 60 000 ரூபாவை மூலதன மாகக் கொண்டுவர உடன்படுவதனூடாக ¼ பங்கு இலாபநட்டம் வழங்கவும் உடன்பட்டனர். ஞானன், கண்ணன் ஆகியோரின் 31-7-88 இல் உள்ளபடியான ஐந்தொகை வருமாறு

மூலதனம்: ஞானன்	160 000	காணி கட்டிடம்	125 000
கண்ணன்	100 000	பொறி	70 000
ந.மு க/கு: கண்ணன்	4 000	தளபாடம்	36 000
5% வங்கிக்கடன்	40 000	சரக்கு	47 500
கடன்கொடுத்தோர்	16 500	கடன்பட்டோர்	53 000
வங்கிமேலதிகப்பற்று	11 300	சில்லறைக்காசு	300
	331 800		331 800

அரவிந்தனைப் பங்காளனாகச் சேர்ப்பதற்காக 31-7-88 இல் சொத் துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டன. பொறித்தொகுதி77 000/- சரக்கின் நிகழ்கால சந்தைவிலை 44 000/- ஆக இருந்தது. கடன்பட்டோரில் 8% அ மு கடனாக கருத வேண்டியிருந்தது. காணி கட்டிடங்கள் 10% உயர்ச்சிப் பெறுமதியை அடைந்தன. அரவிந்தனுக்குரிய நன்மதிப்புத்தொகை 12 800ஐ அவர் கொடுக்கஇயலாதவராக இருந்தமையால் மூலதனக் கணக்கினூடாக சரிசெய்ய இணங்கிக் கொண்டனர். நிறுவனம் தனது வழமையான கொடுக்கல்வாங்கல்களை வங்கியினூடாகவே செய்வது வழக்கம்.

தயாரிக்குக;

பங்காளரைச் சேர்ப்பது தொடர்பாக சகல கணக்குகளும் 1-8-88 இல் பங்குடைமையின் ஐந்தொகையும்

8. சிந்து, பைரவி இருவரும் 3:2 என்ற விகிதத்தில் இலாபநட்டத் தைப் பகிரும் அடிப்படையில் ஒரு உற்பத்தி நிறுவனத்தை நடாத்தி வருகின்றனர். அவர்களது 1-6-88 இல் உள்ளபடியான ஐந்தொகை பின்வருமாறு

பொறுப்புக்கள்		சொத்துக்கள்	
மூலதனம்: சிந்து	60 000	காணிகட்டிடம்	35 000
பைரவி	40 000	பொறிகள்	28 000
சிந்து கடன்	10 000	தளபாடங்கள்	19 500
கடன்கொடுநர்	18 500	சரக்கிருப்பு	21 300
நின்ற செலவீடுகள்	1 650	கடன்படுநர்	24 400
		காசும் வங்கியும்	1 950
	130 150		130 150

2-6-88 இல் காம்போதி என்பவரை $\frac{1}{6}$ பங்கு இலாபத்துக்கு உரித்தாகும் வண்ணம் ஒரு பங்காளராக இணைக்க ஒப்புக்கொண் டனர். காம்போதி 30 000 ரூபா மூலதனப் பங்களிப்பு செய்ய வேண்டும் எனவும், நிறுவன நன்மதிப்பு 24 000 ரூபா என மதிப் பிடப்படுகின்றதெனவும் அறிவித்தனர். 2-6-88 இல் நிறுவன சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு மதிப்பிடப்பட் டன. காணிகட்டிடம் 10% உயர்விலும் சரக்கிருப்பு 5% குறை வாகவும் மதிப்பிடப்பட்டது. தளபாடங்கள் 18 000 ரூபா பெறு மதி கொண்டனவாகவும் பொறிகள் 30 500 ரூபா எனவும் கணித் தனர். கடன்படுநர் 5% ஐ அ. மு. கடனுக்கு ஒதுக்கம் செய்து மதிப்பிடவேண்டும். காம்போதி தனது நன்மதிப்புக்குரிய பங்கை காசாகக் கொண்டுவர இயலாதிருந்தார். நன்மதிப்புக் கணக்கை உருவாக்கி இல்லாமல் செய்ய பங்காளர்கள் ஒப்புக்கொண்டனர்.

தயாரிக்குக 1) மறுபடி விலைமதித்தல் கணக்கு

2) பங்காளர் மூலதனக் க / கு (நிரன் முறையில்)

3) புதிய பங்குடைமையின் ஐந்தொகை

9. ஹரி, ஸ்ரீ, கோபு மூவரும் ஒரு பங்குடைமையை நடாத்தி வருகின்றனர். இவர்களது இலாபநட்ட விகிதம் 5:3:2 என காணப்பட்டது.

31-1-89 இல் இப் பங்குடைமையின் ஐந்தொகை

மூலதனம் : ஹரி	1 00 000	காணி கட்டிடம்	1 05 000
ஸ்ரீ	75 000	பொறிகள்	43 000
கோபு	40 000	தளபாடம்	22 000
பொது ஒதுக்கம்	25 000	முதலீடுகள்	24 000
சென்மதி உண்டியல்	11 000	சரக்கிருப்பு	29 300
கடன் கொடுத்தோர்	26 000	கடன்படுநர்	27 200
		ஸ்ரீ பற்றுக் க/கு	6 000
		காசு - வங்கி	20 500
	2 77 000		2 77 000

குரு என்பவரை $\frac{1}{5}$ பங்கு இலாபத்தை பெறும் அடிப்படையில் பங்காளராக்கிக் கொண்டனர். *31-1-89* இல் குரு தனது பங்கிற் குரிய மூலதனமாக 40 000 ரூபாவையும் கொண்டுவரல் வேண்டும். அன்று நன்மதிப்பு 36 000 என மதிப்பிடப்பட்டது. ஆனால் இதனை மூலதனக் கணக்கூடாகவே சீராக்கம் செய்ய உடன்பட்டனர். அத்திகதியில் முதலீடுகள் 28 000 ரூபாவுக்கு விற்கப்பட்டு 10 500 ரூபா கொடுத்து உண்டியல் மீட்கப்பட்டது. தளபாடம், பொறிகள் முறையே ரூபா 45 000 ரூபா 21 000 பெறுமதியாகவும் கடன்பட்டோருக்கு 4% அ. மு. கடனுக்கு ஒதுக்கம் செய்தும் மதிப்பிடப்பட்டது. சரக்கிருப்பு புத்தக விலையில் 15% வீழ்ச்சியை அடைந்தது. காணி கட்டிடங்கள் 110 000 ரூபா மதிப்புடையனவாக இருந்தன.

வினு: 1) மீள விலைமதித்தல் க / கு

2) நிரன்முறையிலமைந்த பங்காளர் மூலதனக் கணக்கு

3) புதிய பங்குடைமையின் (1-2-89) ஐந்தொகை

10. ஞானம், யோகன் ஆகிய இரு பங்காளரும் இலாப நட்டத்தை $\frac{2}{3} : \frac{1}{3}$ என்ற விகிதத்தில் பகிரும் பங்குடைமை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களின் 31-12-87 ஆம் திகதிய ஐந்தொகை வருமாறு

மூலதனம் : ஞானம்	90 000	காணி கட்டிடம்	50 000
யோகன்	45 000	மோட்டார்	45 000
கடன் கொடுத்தோர்	10 000	முதலீடு	10 000
சென்மதியுண்டியல்	10 000	இறுதி இருப்பு	18 000
		வருமதியாளர்	12 000
		காசும். வங்கியும்	15 000
		முற்பணம்	5 000
	155 000		155 000

நாதன் என்பவர் இலாபநட்டத்தை 5 : 3 : 2 என்ற விகிதப்படி ஏற்கும் ஒப்பந்தப்படி 1-1-88 இல் இவ் வியாபாரத்தில் பங்காளனாக சேர்க்கப்படுகிறார். இவர் 20 000 ரூபாவை மூலதனமாகக் கொண்டுவருவதுடன் 6 000 ரூபாவுக்கு நன்மதிப்பு கணக்கு ஆரம்பிக்கவும் உடன்பட்டுக் கொண்டார். சொத்துக்கள் விலை மதிக்கப்பட்டபோது காணிகட்டிடம் 62 000 ரூபாவாகவும் மோட்டார்வாகனம் 5 000 ரூபாவால் அதிகரித்தும் இறுதியிருப்பு 15 000 ரூபாவாகவும் மதிக்கப்பட்டது. வருமதியாளரில் 1 000 ரூபா அறவிட முடியாக்கடனாகவும் பதிவழிக்கப்பட வேண்டுமெனவும் கொண்டு பங்காளர் சேர்தல் தொடர்பான கணக்குகளையும் புதிய ஐந்தொகையையும் தயார் செய்க.

11. நிமலன், விமலன் ஆகிய இருவரும் இலாப நட்டங்களை 5 : 3 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவர், 31-12-85 இல் உள்ளவாறான ஐந்தொகை வருமாறு :

மூலதனம்: நிமலன்	20 000	பொறி இயந்திரம்	32 800	
விமலன்	20 000	கழி: தே. ஒதுக்கம்	2 800	30 000
கடன் கொடுநர்	5 450	சரக்கு		6 300
		கடன் படுநர்		2 000
		காசு		3 150
		நன்மதிப்பு		4 000
	45 450			45 450

இலாப நட்டங்களை சமமாக பகிரும் நோக்கத்தோடு 1-1-86 இல் கமலன் என்பவரை புதிய பங்காளராகச் சேர்த்துக்கொண்டனர். அத் திகதியில் நன்மதிப்பின் விலை 8 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. கமலன் 20 000 ரூபா மூலதனத்துடன் சேர்ந்தார். பொறிவிருட்சம் 29500 ரூபாவாகவும் சரக்கு 3 00 ரூபா கூட்டியும் மதிப்பிடப்பட்டது. நன்மதிப்பைப் புத்தகத்தில் காட்டுவதில்லை எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மறுபடி விலை மதிப்பு கணக்கையும் பங்காளர் மூலதனக் கணக்கையும் புதிய பங்காளர் சேர்ந்தபின் ஐந்தொகையையும் தயார்செய்க

12. முரளி, புரளி, வெகுளி என்னும் பங்காளர் தமது மூலதனக் கணக்கில் முறையே ரூபா 60 000 ரூபா 30 000 ரூபா 30 000 வைத்திருந்தார்கள். அவர்களிடையே இலாப நட்டப் பகிர்வு விகிதம் 3: 2 : 1. புத்தகத்தில் ரூபா 30 000/- பெறுமானமுள்ள நன்மதிப்பினை பதிவழிக்கவும் தமது மூலதன கணக்கு மீதிகளை இலாப நட்டம் பகிரும் விகிதத்தில் வைத்திருக்கவும் தீர்மானித்தார்கள். பங்காளர் கீழ்க்கூறப்படும் முறைகளில் ஒன்றினையோ அல்லது வேறொன்றினையோ விரும்பினால் அதற்கு தேவையான செம்மையாக்கங்களை எப்படிச் செய்வீர் என்பதனை காட்டவும்.

அ) வியாபாரத்தின் தேறிய சொத்துக்களில் பாதிப்பை ஏற்படுத்தாமையினை விரும்புதல்

ஆ) வியாபாரச் சொத்தில்மேலதிகமாகவுள்ள காசினை வியாபாரத்திலிருந்து எடுக்க விரும்புதல்

இ) வியாபாரத்தின் சொத்துக்களை காசினை வியாபாரத்தில் இடுவதன் மூலம் அதிகரிக்க விரும்புதல்

ஈ) கருளி என்னும் புதிய பங்காளரிடம் ரூபா 30 000/- த்தினை மூலதனமாகப் பெற்று இலாபத்தில் 25 % த்தினை அவருக்கு ஒளிதல்

13. கலை, வர்த்தகம் இருவரும் 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

31-12-88 இல் இவர்களது ஐந்தொகை

கடன் கொடுநர்	25 000	நி. சொத்து	1 45 000
வங்கிக் கடன்	70 000	ந. மு. சொத்து	60 000
கலை க/கு	75 000	காசு	5 000
வர்த்தம் க/கு	40 000		
	2 10 000		2 10 000

கடந்த மூன்றாண்டுகளாக இவர்கள் உழைத்த தேறிய இலாபம் பின்வருமாறு

1986 11 700 ரூபா
87 22 400 ரூபா
88 14 400 ரூபா

1-1-89 இல் விஞ்ஞானம் என்பவரைப் பங்காளராக்க முனைந்த போது பின்வரும் நிபந்தனைகள் கூறப்பட்டன.

அ) விஞ்ஞானத்தின் மூலதனமானது கலை, வர்த்தகம் இருவரின் மூலதனத்திலும் 2/5 ஆக இருத்தல்

ஆ) இலாப நட்டம் கலை 2/5 வர்த்தகம் 2/5 விஞ் 1/5 நன்மதிப்பானது கடந்த இரு ஆண்டின் சராசரியின் மும்மடங்காக கணிப்பிடுதல் எனினும் இதற்கு கணக்குகளோ அல்லது காசுக் கொடுப்பனவோ இருக்கக் கூடாது.

இ) விஞ்ஞானத்தின் மூலதனத்தைக் கொண்டு வங்கிக் கடன் ஈடாக்கப்பட வேண்டும்

ஈ) காசு தவிர்ந்த நிலையான சொத்துக்கள் 8 000 ரூபா பெறுமதி அதிகரிப்பு ஏற்பட்டதெனினும் 10 000 ரூபா பெறுமதியான நிலையான சொத்துக்களை கலைக்கு சமவிலையில் காசிற்கு விற்றனர்

1) தேவையான நாட்குறிப்புகள்

2) புதிய பங்குடைமையின் ஐந்தொகை ஆகியனவற்றைத் தயாரிக்குக.

14. மாலா, லீலா. ஆகிய இருவரும் 4 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து கொண்டு ஒரு பங்குடைமையை நடாத்தி வந்தனர். இவர்களது மூலதன மீதி 1-1-89 இல் முறையே 1 50 000, 55 000 ஆக இருந்தன. சொத்துக்களின் நிலைவருமாறு: நிலையான சொத்துக்கள் 1 70 000. நடைமுறைச் சொத்துக்கள் 58 000. காசு 1 000. ரூபா 10 000 ரூபா பெறுமதியான பொது ஓதுக்கத்தையும் 14 000 ரூபா கடன்கொடுத்தோரையும் தவிர்ந்த வேறு பொறுப்புக்கள் ஏதும் இருக்கவில்லை.

2-1-89 இல் கலா என்பவர் 30 000 ரூபா மூலதனத்தை வழங்கி $\frac{1}{5}$ பங்கு இலாபம் பெறும் பங்காளராக இணைய விரும்புகின்றார்.

1) கலாவின் இணைவின் பின் இலாப விகிதம் முறையே 2:2:1 என மாற்றமடைகிறது.

2) கலா தன் நன்மதிப்பைக் காசாகக் கொடுக்க இயலாதவர். அத்துடன் அவர் தனது மூலதனத்தின் ஒரு பகுதியைக் காசாகவும் மீதியை 15 000 ரூபாபெறுமதியான முதலீட்டுப்பத்திரம் ஒன்றை வழங்குவதனூடாக நிறைவேற்றுகின்றார்,

3) நடைமுறைச் சொத்துக்களில் 5 000/- குறைந்த மதிப்பு ஏற்பட்டதன்றி நிலையான சொத்துக்களின் மதிப்பில் மாற்றம் ஏற்படவில்லை.

4) இலாபம் பகிரும் அடிப்படையில் மூலதனம் சீராக்குவதெல்லாம் அதற்கேற்ப நிலையான சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வதெனவும் இணங்கியிருந்தனர்.

5) 2-1-89 இல் நிறுவன நன்மதிப்பு 30 000 என மதிப்பிட்டாலும் இதனைக் கணக்குகளில் காட்டாது சீராக்க விரும்பினர்

தயாரிக்குக :

1) மீள விலைமதித்தல் கணக்கு

2) பங்காளர் மூலதனக் கணக்கு

3) புதியநிறுவனத்தின் ஐந்தொகை

பங்காளர் விலகல்

ராஜன், மோகன், ஜீவன் ஆகியோர் இலாப நட்டத்தை $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{4}$ என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்கள்.

31-12-87 இல் ஐந்தொகை

மூலதனம் :		
ராஜன்	1 50 000	
மோகன்	80 000	
ஜீவன்	70 000	300 000
பொது ஒதுக்கம்		20 000
ந. மு. க/கு மீதி :		
ராஜன்	8 000	
மோகன்	4 000	
	12 000	
ஜீவன்	(2 000)	10 000
நடைமுறைக் கடன் :		
கடன் கொடுத்தோர்		40 000
மோகன் கடன் 2% கடன்		30 000
சென்மதி உண்டியல்		5 000
		4 05 000

நிலையான சொத்து :		
கட்டிடம்		60 000
காணி		90 000
இயந்திரம்		85 000
தளபாடம்		50 000
நன்மதிப்பு		30 000
ந. மு. சொத்து :		
இறுதியிருப்பு		40 000
க, பட்டோர்	16 800	
— அ. மு. க.		
ஒதுக்கம்	1 800	15 000
முதலீடு		10 000
காசு		25 000
		4 05 000

1-1-88 இல் இப்பங்குடைமையிலிருந்து ராஜன் விலகுவதாகத் தீர்மானித்தான். அத்திகதியில் நன்மதிப்பு 50 000 ரூபா ஆக மதிக்கப்பட்டது. பேரேட்டுப் பதிவுகளையும் விலகியபின் உள்ள ஐந்தொகையையும் தயாரிக்குக.

2. மல்லி, மிளகாய், புளி ஆகியோர் இலாபநட்டத்தை 3:2:1 என்ற விகிதத்தில் இலாபநட்டத்தில் பகிரும் பங்காளர். அவர்களது 31-12-88ல் ஐந்தொகை வருமாறு:

மூலதனம்:			நிலையான சொத்து:		
மல்லி	90 000		காணிகட்டிடம்		100 000
மிளகாய்	80 000		மோட்டார்		135 600
புளி	100 000	27 0000	தளபாடம்		44 400
பொது ஒதுக்கம்		20 000			
நீண்ட கால கடன்:			ந. மூ. சொத்து:		
5% வங்கிக் கடன்		50 000	இறுதியிருப்பு		32 000
			கடன்பட்டோர்	28 400	
ந. மூ. கடன்:					
கடன் கொடுத்தோர்		30 000	அ. மு க. ஒ.	400	28 000
வங்கி மேலதிகப் பற்று		10 000			
மிளகாயின் 5% கடன்		20 000	காசு		60 000
		400 000			400 000

1-1-89 இல் புளி பங்குடைமையிலிருந்து விலகினார். அதே தேதியில் வியாபாரத்தின் நன்மதிப்பு 36000/- ரூபா என மதிப்பிடப்பட்டது. புளிக்கு கொடுக்க வேண்டிய தொகையில் 50000/- காசாகவும் மீதித் தொகை 4% கடனுகவும் விடப்பட்டது.

பின்வருவன வற்றை கவனத்தில் கொண்டு வேண்டிய கணக்குகளைச் செய்து விலகிய பின் உள்ள ஐந்தொகையைத் தயாரிக்க.

அ) நன்மதிப்பில் உண்மையான விலையைப்பதிதல்

ஆ) நன்மதிப்பில் விலகும் பங்காளனுக்கு உரிய பங்கை மட்டும் பதிதல்

இ) தொடர்ந்திருக்கும் பங்காளர் நன்மதிப்புத் தொகையைக் கூட்டவில்லை எனக் கருத்தில் கொண்டு

3. அகிலன், வண்ணன், கமலன் மூவரும் ஒரு பங்குடைமை வியாபாரத்தில் முறையே 3: 2: 1 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்துகொள்ளும் பங்காளர்களாவர். 1984 டிசெம்பர் 31இல் அவர்களின் சுருக்கிட்ட ஐந்தொகை பின்வருமாறு:

ஐந்தொகை

மூலதனம்:			
அகிலன்	1 00 000	காணி கட்டிடம்	80 000
வண்ணன்	80 000	பொறித்தொகுதி	1 00 000
கமலன்	60 000	தளபாடமும் பொருத்தும்	25 000
		நன்மதிப்பு	10 000
கடன் கொடுத்தோர்	22 500	சரக்கிருப்பு	27 000
		கடன்பட்டோர்	12 000
		காசு	8 500
	2 62 500		2 62 500

இத்திகதியில் கமலன் இளைப்பாறினார், அன்றையதினம் பங்குடைமையின் நன்மதிப்பு 40000 ரூபாவெனத் தீர்மானிக்கப்பட்டதுடன், காணிகட்டிடம், பொறித்தொகுதி, தளபாடமும் பொருத்துக்களும், சரக்கிருப்பு என்பன முறையே 100000 ரூபா, 90 000 ரூபா, 27000 ரூபா, 32000 ரூபா என மறுமதிப்பீடு செய்யப்பட்டன. இப்புதிய எண்கள் புத்தகங்களில் சேர்த்துக்கொள்வதெனவும், கமலனுக்கு விலகும் போது 7833 ரூபா காசுக் கொடுப்பனவு செய்து மீதித் தொகை தற்போதைக்கு பங்குடைமைக்கு ஒரு கடனாக விட்டுவிடுவதெனவும் இணங்கிக்கொள்ளப்பட்டது.

பின்வருவனவற்றைக் காட்டுக.

அ) குறிப்பேட்டுப் பதிவுகளின்மூலம் பங்குடைமையின் புத்தகங்களில் மேற்கொடுக்கப்பட்டவற்றின் விளைவுகள்.

ஆ) கமலன் விலகியபின்னுள்ள புதிய பங்குடைமையின் ஐந்தொகை.

4. சிவம், சக்தி, நந்தி ஆகியோர் சமமாகப் பகிரும் பங்காளராவர்.

31-12-88 இல் ஐந்தொகை

மூலதனம் :			காணிகட்டிடம்		140 000
சிவம்	140 000		மோட்டார்	100 000	
சக்தி	80 000		பெ.தே. ஒ	40 000	60 000
நந்தி	60 000	280 000	தளபாடம்	30 000	
நடைமுறைக்கணக்கு			பெ. தே. ஒ	10 000	20 000
சிவம்	1 000		முதலீடு		20 000
சக்தி	(2 000)	10 000	சரக்கிருப்பு		60 000
பொது ஒதுக்கம்		20 000	காசு	14 000	
5% சக்தி கடன்		20 000	அ.மு.க.ஒ	4 000	10 000
5% ஈட்டுக்கடன்		10 000	காசு		90 000
கடன்கொடுத்தோர்		60 000			
		400 000			400 000

1-1-89 இல் இப்பங்குடைமையிலிருந்து நந்தி விலகினார். அவர் விலகும்போது வியாபாரத்தின் நன்மதிப்பு 30 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. தொடர்ந்திருக்கும் பங்காளர் நன்மதிப்புத் தொகையைக் கணக்கில் பதிவதில்லை எனவும், செம்மையாக்கங்களை மூலதனக்கணக்கின் ஊடாகச் செய்வதெனவும் தீர்மானித்தனர்

நந்தி விலகும்போது பங்குடைமையின் சொத்துக்கள் பின்வருமாறு மறுபடி விலைமதிக்கப்பட்டது.

காணி கட்டிடம் 10% குறைத்து மதிப்பிட்டனர். முதலீடுகள் 22 500 ரூபாவுக்குத் தேறிற்று. கடன்பட்டோரில் 10% அறவிட முடியாக்கடன் ஒதுக்கம் செய்வதாகத் தீர்மானித்தனர். சரக்கிருப்பில் 30 000 ரூபா பெறுமதியானதை 10% குறைத்துச் சிவம் பொறுப்பேற்றுக் கொண்டார். ஈட்டுக்கடன் ஒரு வருட வட்டி

யுடன் தீர்க்கப்பட்டது. சக்தியின் கடன் வட்டி இருவருடங்களுக்குச் செலுத்தவில்லை. சக்தி ஒரு வருட வட்டியை விட்டுவிடுவதற்கு இணங்கினார். சக்தியின் கடன் தீர்க்கப்பட்டது. கடன்கொடுத்தோரில் அரைப்பங்கை 5% கழிவுடன் தீர்ப்பதற்கு சிவம் இணங்கிக் கொண்டார்.

நந்தி பங்குடைமையிலிருந்து விலகி தனக்குரிய தொகையை பங்குடைமைக்கு கடனாக விட உடன்பட்டார்.

பின்வருவனவற்றைத் தயார் செய்க

1. செம்மையாக்கலுக்கான குறிப்பேட்டுப்பதிவுகள்

2. மறுபடி விலைமதித்தல் கணக்கு

3. பங்காளர் மூலதனக் கணக்கு

4. நந்தி விலகியபின் உள்ள ஐந்தொகை

5. ரவி, கவி, புவி ஆகியோர் இலாப நட்டத்தை 2 : 1 : 1 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்.

31-12-88 இல் ஐந்தொகை

மூலதனம்		
ரவி	75 000	
புவி	50 000	
கவி	50 000	175 000
பொது ஒதுக்கம்		18 000
நடைமுறைக்கணக்கு		
ரவி	4 800	
புவி	2 000	
கவி	1 500	8 300
நடைமுறைக்கடன்		
ரவியின் 5% கடன்		20 000
கடன்கொடுத்தோர்		30 000
சென்மதி உண்டியல்		10 000
வங்கி மேலதிகப்பற்று		10 000
		271 300

நிலையானசொத்து			
	கொள்விலை	செ. தே.	மீதி
மோட்டார்	1 00 000	10 000	90 000
இயந்திரம்	80 000	15 000	65 000
தளபாடம்	40 000	10 000	30 000
	2 20 000	35 000	185 000
நன்மதிப்பு			10 000
நடைமுறைச்சொத்து			
இறுதிச்சரக்கு			20 000
முதலீடு			10 000
கடன்பட்டோர்	28 400		
அ.மு.க.ஒதுக்கம்	(140)		27 000
காசு			19 300
			271 300

1-1-89 இல் புவி பங்குடைமையிலிருந்து இளைப்பாறுகிறார். அத் திகதியில் வியாபாரத்தின் நன்மதிப்பு 18 000 ரூபாவாக மதிப்பி டப்பட்டது. தொடர்ந்திருக்கும் பங்காளர் நன்மதிப்புத்தொகை யைக் கூட்ட விரும்பவில்லை புவி விலகும்போது பங்குடைமையின் சொத்துக்கள் பின்வருமாறு மறுபடி விலைமதிக்கப்பட்டது.

1. முதலீடுகள் 10% உயர்வில் விற்கப்பட்டது.

2. 20 000 பெறுமதியான மோட்டார் வாகனத்தை புவி இளைப் பாறும் போது 16 500 ரூபா விலையில் பொறுப்பேற்றுக் கொண்டான். அம்மோட்டார் வாகனத்தின் திரண்ட பெறு மானத் தேய்வு ஒதுக்கம் 2 000 ரூபா எனக்காணப்பட்டது.

3. சரக்கிருப்பு புத்தகவிலையில் மதிக்கப்பட்டதுடன் அறவிடமுடி யாக் கடனுக ரூ00 ரூபாவைப் பதிவழிப்பதுடன் மீதிக்கடன் பட்டோரில் 5% ஐ அறவிடமுடியாக்கடன் ஒதுக்கமாக வைப் பதெனத் தீர்மானித்தனர்.

4. இயந்திரம் 60 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது.

5 ரவியின் கடன் ஒருவருட வட்டியுடன் தீர்க்கப்பட்டது.

6. தளபாடம் 40 000 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

7. கடன் கொடுத்தோர் 2% கழிவை அனுமதித்தனர்.

8. புவிக்கு கொடுக்க வேண்டிய தொகையில் 20 000 ரூபாவை 5% கடனுக நிறுவனத்தில் விடுவதாகத் தீர்மானித்தனர்.

பின்வருவனவற்றைத் தயாரிக்க

1. செம்மையாக்கலுக்கான குறிப்பேட்டுப்பதிவுகள்

2. மறுபடி விலைமதித்தல் கணக்கு

3. பங்காளர் மூலதனக்கணக்கு

4. புவி விலகியபின் உள்ள ஐந்தொகை

6. வாணி, ராணி, ரமணி ஆகிய மூவரும் 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிரும் பங்குடைமையின் பங்காளர்கள்

30-5-87ல் இருந்தவாறான ஐந்தொகை

மூலதனம்:		நிலையான சொத்துக்கள்	
வாணி	40 000	இயந்திரம்	40 000
ராணி	30 000	தளபாடம்	18 000
ரமணி	10 000		
கடன் கொடுத்தோர்	20 000	ந. மூ. சொத்துக்கள்	
		சரக்கிருப்பு	20 000
		கடன்பட்டோர்	10 000
		வங்கி	12 000
	100,000		100 000

1-6-87 ல் அன்று ரமணி பங்குடைமையிலிருந்து இளைப்பாறவும், பரணி என்பவர் புதிதாகச் சேரவும் தீர்மானித்து செயல் படுத்தப்பட்டது. இதன் பொருட்டு நிறுவனத்தின் சொத்துக்கள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட்டன.

இயந்திரம்	48 000 ரூபா
தளபாடம்	18 000 ரூபா
சரக்கிருப்பு புத்தகப் பெறுமதி	
நன்மதிப்பு	16 000 ரூபா

கடன்பட்டோரில் 2000 ரூபா ஐயக்கடன் ஏற்பாடு செய்தல், நன்மதிப்பிற்குப் புறம்பான கணக்கொன்றும் திறவாது, மூலதனக் கணக்குகளில் சம்பந்தப்பட்ட செம்மையாக்கல்கள் செய்தல் வேண்டும். பரணி 25% இலாபம் பெறும் உரிமையுடன் மொத்தமாக 24 000 ரூபாவை பங்குடைமைக்குச் செலுத்தினார். ரமணியின் கொடுப்பனவுகள் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

பின்வருவனவற்றைத் தயார் செய்க

1. மறுபடி விலைமதித்தல் கணக்கு
2. நிரன்முறையில் பங்காளர் மூலதனக்கணக்கு
3. பங்குடைமையின் புதிய ஐந்தொகை

7. ரோஜா, மல்லிகை, முல்லை ஆகியோர் இலாபநட்டத்தை 5: 3: 2 எனப்பகிரும் பங்காளர்

31-12-88 இல் ஐந்தொகை

மூலதனம்:

ரோஜா	80 000	காணிகட்டிடம்	80 000
மல்லிகை	80 000	பொறிவிருட்சம்	125 000
முல்லை	80 000	நன் மதிப்பு	20 000
		சரக்கிருப்பு	27 000
பொது ஒதுக்கம்	18 000	கடன் பட்டோர்	10 000
5% வங்கிக்கடன்	12 000	காசு	18 500
கடன் கொடுத்தோர்	10 500		
	2 80 500		2 00 500

31-12-88ல் முல்லை பங்குடை மையிலிருந்து இளைப்பாறினன். அத் திகதியில் நன்மதிப்பு 60 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. அத் திகதியில் சொத்துக்கள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டது. காணி கட்டிடம் 85000 ரூபா, பொறிவிருட்சமும் பொறித் தொகுதியும் 100000 ரூபா, சரக்கிருப்பு புத்தக விலையில் மதிப்பிட்டனர். கடன் கொடுத்தோர் 5% கழிவு அனுமதித்தனர். கடன்பட்டோரில் 5% அ. மு. க. ஒதுக்கம் செய்யப்பட்டது. முல்லைக்குக் கொடுக்கவேண்டிய தொகை பங்குடைமைக்கு ஒரு கடனாக விடப்பட்டது.

1-1-89 இல் தாமரை ஒரு பங்காளனாகச் சேர்க்கப்பட்டு இலாபத்தில் $\frac{1}{4}$ பங்கு பெறுவதற்கு உடன்பட்டார். அவர் தமது மூலதனமாக 100 000 ரூபாவைக் காசாகக் கொண்டு வந்தார். நன்மதிப்புக் க/கை பதிவழிப்பது எனவும், புதிய இலாப நட்ட விகிதத்தில் தமது மூலதனத்தை வைத்திருப்பதற்கும் இணங்கிக் கொண்டனர். பின்வருவனவற்றைத் தயார்செய்க.

1) பங்காளர் மூலதனக் க/கு

2) மறுபடி விலைமதித்தல் க/கு

3) விலகல் சேர்தலின் பின் உள்ள ஐந்தொகை.

3. அலன், பொப், சார்ள்ஸ் என்பவர்கள் தமக்கிடையே 3: 2: 1 என்ற அடிப்படையில் இலாப நட்டத்தை பகிரும் பங்காளர்கள்.

30-06-1982 ல் உள்ளவாறான ஐந்தொகை

மூலதனம்			நிலையான சொத்துக்கள்		
அலன்	85 000		கட்டிடம்	90 000	
பொப்	65 000		பொறி வாகனங்கள்	37 000	
சார்ள்ஸ்	35 000	185 000	இருப்புக்கள்	15 000	
நடைமுறைக் கணக்கு மீதி				2 000	144 000
அலன்	3 714		நடைமுறைச் சொத்துக்கள்		
பொப் –வரவு மீதி	(2 509)		இணைப்புச் சரக்கு	62 379	
சார்ள்ஸ்	4 678	5 883	கடன் பட்டோர்	34 980	
கடன் க/கு சார்ள்ஸ்		28 000	காசு	760	98 119
நடைமுறைப் பொறுப்புக்கள்					
கடன் கொடுத்தோர்	19 036				
வங்கி மேலதிகப் பற்று	4 200	23236			
		2 42 119			2 42 119

30 யூன் 1982 ல் சார்ள்ஸ் பங்குடைமையிலிருந்து இளைப்பாறுவதென தீர்மானித்தார். அதே தினம் டொன் ஒரு பங்காளனாக பங்குடைமையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்வரும் விடயங்கள் இணங்கப்பட்டன.

1) குறிப்பிட்ட சொத்துக்கள் மீள் மதிக்கப்பட்டன

கட்டிடம்	ரூ. 1 20 000/-
பொறி	ரூ. 35 000/-
இருப்புச் சரக்கு	ரூ. 54 179/-

2) ரூ 3 000/- தொகைக்கு ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்படும்

3) ரூ 42 000/- தொகைக்கு நன்மதிப்பு சார்ல்ஸ் இழப்பாறும் திகதியில் புத்தகங்களில் பதியப்படும். புதிய நிறுவனத்தின் பங்காளர்கள் நன்மதிப்புக் கணக்கை புத்தகங்களில் பேண விரும்பாததால் அது திரும்ப புதிய பங்காளர்களின் மூலதனம் கணக்கினூடாக பதிவழிக்கப்படும்.

4) அலனும், பொப்பும் முன்பிருந்த விகிதப்படியே இலாபத்தை பகிர்வர், டொண், பொப் பெறும் இலாப பங்கை பெறுவார்.

5) சார்ல்ஸ் தனக்கு வரவேண்டிய தொகையின் பகுதிக் கொடுப்பனவாக வாகனமொன்றினை ரூ 3900/- புத்தக விலையில் எடுத்துக் கொள்வதோடு, தனக்கு வருமதியான தொகையில் ரூ 20 000/- ஐ கடனாக நிறுவனத்திலேயே விட்டு வைத்து மீதி முழுவதையும் காசாக பெற்றுக் கொண்டார்.

6) புதிய பங்குடைமையின் பங்காளர்கள் மூலதனத்துடன், நடைமுறைக் கணக்கையும் கவனத்திலெடுத்துதம்மா லிடப்பட்ட தொகையை சமமாக்கிக் கொண்டார் கள். டொண் பழைய பங்குடைமையின் மூலப் பங்காளர்களில் யார் குறைந்த முதலீட்டைக் கொண்டுள்ளாரோ அவரது மூலதன நடைமுறைக் கணக்கு தொகைக்குச் சமமாக்கக் கூடியவகையில் காசு கொண்டு வருதல் வேண்டும். பழைய பங்குடடமையின் மூலப் பங்காளரில் உயர்ந்த முதலீட்டைக் கொண்டுள்ளவர். தனது மூலதன நடைமுறைக் கணக்குகளிலுள்ள தொகையை புதிய பங்காளரின் மூலதன நடைமுறைக் க/கு மீதிகளுக்கு சமமாக்கும் வகையில் காசை வெளியே எடுக்கலாம்.

1) மேற் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கான கணக்குகள் விலகும் பங்காளரின் கணக்கு உள்ளடங்கலாக.

2) 30 யூன் 1982 இல் அலன், பொப், டொண் ஆகியோரின் பங்குடைமையின் ஐந்தொகை

பங்குடைமை இறுதிக் கணக்குகள் — 2

1. இராமு, மதன் ஆகியோர் பங்காளராகப் பின்வரும் ஒப்பந்தத்திற்கு அமைய முயற்சியை நடத்தி வருகின்றனர்.

1. இலாப நட்டம் இராமு 3/5 மதன் 2/5

2. இராமு, மதன் ஒவ்வொரு மாதமும் சம்பளமாக முறையே ரூ. 400/- வும் 300/- பெற உரிமை உடையவர்கள்.

3. மூலதன வட்டி வருடம் ஒவ்வொருவருக்கும் 10% ஆகும்

4. எடுப்பனவிற்கு வட்டி இல்லை

இவர்கள் அகிலன் என்பவரை ஒரு பங்காளனாகச் சேர்க்க உடன்பட்டனர். இவர் 1-7-1985 இல் பங்காளனாகச்சேர்ந்து கொண்டார். இவருடைய இலாபப்பங்கு $\frac{1}{5}$ ஆகும். இவரின் மாதச் சம்பளம் 500/- ஆகும். இவர் சேரும்போது நிறுவனத்தின் நன்மதிப்பானது ரூ.12 000 ஆக மதிக்கப்பட்டது. ஆனால், நன்மதிப்புக் கணக்கை ஆரம்பிக்காது செய்ய வேண்டிய செம்மையாக்கங்களை மூலதனக் கணக்கூடாகச் செய்து கொண்டனர்.

31-12-1985 இல் பரீட்சை மீதி

மூலதனம் — இராமு		40 000
— மதன்		30 000
— அகிலன் தந்த பணம்		30 000
நடைமுறை க/கு இராமு	2 000	
மதன்		3 000
பற்றுக்கள் இராமு	5 000	
மதன்	4 000	
அகிலன்	2 000	
கடன் கொடுநர்		15 000
நிலையான சொத்துக்கள்	1 18 000	
நடைமுறை சொத்துக்கள்	35 000	
பகிர்வுகளின் முன் இலாபம்		48 000
	1 66 000	2 66 000

இலாப நட்டப்பகிர்வுக்கான கணக்குக்கு இலாபப்பகிர் வானது முதல் 6 மாதம் 18 000/- பின் 6 மாதம் 30 000/- ஆகும். தயாரிக்குக

1. 31-12-85 இல் முடிவுற்ற வருடத்திற்கான இலாபநட்டக் கணக்கு

2. 31-12-85 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய மூலதனக் கணக்கு, நடைமுறைக் கணக்கு.

3. 31-12-85 இல் உள்ளவாறான ஐந்தொகை

2. கலை, வர்த்தகம் என்போர் பங்காளராவர். இவர்களின் ஒப்பந்தம் பின்வருமாறு :

1) இலாப நட்டம் கலை, வர்த்தகம் முறையே 3 : 2 ஆகும்

2. மூலதன வட்டி வருடம் 20%

3) எடுப்பனவுக்கு வட்டி இல்லை

4) வர்த்தகம் இயங்கும் பங்காளராவர், இவரின் மாதவேதனம் ரூபா 500/- ஆகும்

5) பங்காளர் கடனுக்கு வருடம் 20% வட்டி ஆகும்

1-1-84 இல் மீதிகள் பின்வருமாறு :

மூலதனம்	கலை		30 000/-
	— வர்த்தகம்		20 000/-
நடைமுறைக் க/கு	— கலை	(செலவு மீதி)	3 000/-
	— வர்த்தகம்	(செலவு மீதி)	2 000/-
கடன்	— கலை		10 000/-
கடன் கொடுத்தோர்			10 000/-
இயந்திரம்			35 000/-
தளபாடம்			10 000/-
காசும் வங்கியும்			5 000/-
கடன் பட்டோர்			15 000/-
சரக்கிருப்பு			10 000/-

30-6-84 இல் விஞ்ஞானம் என்பவர் புதிய பங்காளனாகச் சேர்க்கப்பட்டார். அவரைச் சேர்க்க முன்பு நிறுவனத்தின் நன்மதிப்பை ரூபா 15 000/- ஆக பங்காளர் மதிப்பீடு செய்தனர். விஞ்ஞானம் தனது மூலதனம் ரூபா 25 000/- ஐக் கொடுத்தார்.

நன்மதிப்பைத் தொடர்ந்து கணக்குகளில் வைக்க விரும்பாது எல்லோரும் பதிவழித்துக் கொண்டனர். நன்மதிப்பு பற்றிய எல்லா நடவடிக்கைகளும் மூலதனக் கணக்கினூடாகச் செய்யப் பட்டது.

விஞ்ஞானம் இயங்கும் பங்காளனைக் கூடமையாற்ற விரும்பிய தால் அவருக்கு மாதச் சம்பளம் ரூபா 400/- வழங்க ஒப்பந்தம் இடம் கொடுத்தது. அவரின் இலாப நட்டப் பங்கு $\frac{1}{4}$ எனவும் இணக்கம் காணப்பட்டது.

ஏனைய சலுகைகளை முன்னைய ஒப்பந்தத்திற்கமைய விஞ்ஞான மும் பெற்றுக்கொள்வார்

1-1-84 தொடக்கம் 31-12-84 வரை நடைபெற்ற பணக் கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரம் பின்வருமாறு :

விஞ்ஞானத்தின் மூலதனம்	25 000/-
காசுக் கொள்வனவு	45 000/-
கடன் கொள்வனவு	60 000/-
காசு விற்பனை	65 000/-
கடன் விற்பனை	90 000/-
கடன் பட்டோரிடம் பெற்ற காசு	60 090/-
கடன் கொடுத்தோருக்குக் கொடுத்த காசு	45 000/-
சம்பளம் (உத்தியோகத்தர்) கொடுத்தது	16 000/-
வாடகை கொடுத்தது	6 000/-
பொதுச் செலவுகள்	4 000/-
தளபாடம் வாங்கியது 30-6-84 இல்	12 000/-
எடுப்பனவுகள் — கூலி	6 000/-
— வர்த்தகம்	7 000/-
— விஞ்ஞானம்	4 000/-
கடன் திருப்பியது — கூலி 30-6-84	5 000/-

1) ஏனைய நடவடிக்கைகள்

வெளித்திரும்பிய சரக்கு	1 000/-
உட்திரும்பிய சரக்கு	2 000/-
கொடுத்த கழிவு	1 500/-
பெற்ற கழிவு	900 /-
அறவிடமுடியாக் கடன் பதிவழித்தது	800/-

2) தளபாடத்திற்கும் இயந்திரத்திற்கும் வருடம் 5% பெறுமானத் தேய்விடுக

3) மொத்த இலாபம் 2 : 3 என்ற அடிப்படையில் பிரிப்பதுடன் எல்லாச் செலவினங்களும் காலம் குறிப்பிடாத நிலையில் சமனாகப் பகிர்தல் வேண்டும்

4) சரக்கிருப்பு 31-12-84 இல் ரூபா 20 000/-

5) தயாரிக்குக :

அ) 31-12-84 இல் முடிவடைந்த வருடத்துக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கையும் (இலாப நட்டக் கணக்கு கால அடிப்படையில் பிரித்துச் செய்க)

ஆ) அத்திகதியில் ஓர் ஐந்தொகையையும்

இ) பங்காளரின் முடிவடைந்த ஆண்டுக்கான நடைமுறைக் கணக்கையும் செய்க

4. மேடம், இடபம், மிதுனம் ஆகியோர் நடத்தும் பங்குடைமை வியாபாரத்தில் இலாப நட்டத்தை அவர்கள் முறையே 6: 3: 1 என்ற விகிதத்தில் பகிர்கிறார்கள். அவர்களது பங்குடைமை ஒப்பந்தமானது.

1) நிலையான மூலதனத்திற்கு வருடம் வட்டி 10% ஆகும்.

2) எடுப்பனவுக்கோ, நடைமுறைக் கணக்கிற்கோ வட்டி அறவிடப்படமாட்டாது.

3) மிதுனத்திற்கு மாதம் ரூபா 1000/- சம்பளம் வழங்கப்படும்.

4) நன்மதிப்பு முன்னைய இரண்டு அல்லது மூன்று வருடங்களின் சராசரி இலாபத்தில் குறைவானதில் 50% ஆகும்

1-7-1984 இல் கடகம் என்பவர் புதிய பங்காளனாகச் சேர்க்கப்பட்டார். அவர் தனது மூலதனமாக ரூபா 40 000/- கொண்டு வந்தார்.

நன்மதிப்புக்கு, புத்தகத்தில் கணக்கு வைத்திருப்பதில்லை எனவும் வேண்டிய திருத்தங்களை பங்காளரின் நடைமுறைக் கணக்கில் பதிவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதிய பங்காளியின் இலாபநட்டப் பங்கு $\frac{1}{5}$ ஆகும்.

31-12-1984 இல் நிறுவனத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு:

மூலதனம்: மேடம்			100, 000
இடபம்			75 000
மிதுனம்			50 000
நடைமுறைக் கணக்கு: மேடம்			3 000
இடபம்			3 500
மிதுனம்			2 500
எடுப்பனவுகள்: மேடம்		12 000	
இடபம்		15 000	
மிதுனம்		13 000	
கடகம்		7 000	
கடகம் — பணம் தந்தது			40 000
தளபாடம் (கொள் விலை)		30 000	
வாகனம் (1-4-84 இல் வாங்கியது)		40 000	
கொள்முதல் (30-6-84 வரை - ரூ. 185 000)		390 000	
விற்பனை (30-6-84 வரை - ரூ. 220 000)			468 500
கடன்பட்டோர் கழிவு ஒதுக்கம்			2 500
தளபாடப் பெறுமானத் தேய்வு ஒதுக்கம்			5 000
சம்பளம் (மிதுனத்தின் சம்பளம் உட்பட)		36 000	
சரக்கிருப்பு (1-1-84)		60 000	
கடன் பட்டோர்		125 000	

கடன் கொடுத்தோர்		20 000
வியாபாரச் செலவுகள்	20 000	
வாகனச் செலவுகள்	4 000	
வங்கியில் காசு	18 000	
	770 000	770 000

உமக்கு கீழ்வரும் மேலதிக விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

1) சரக்கிருப்பு 30-6-1984 இல் ரூபா 80 000/- ஆகவும் 31-12-1984 இல் ரூபா 105 000/- ஆகவும் மதிக்கப்பட்டுள்ளது

2) பெறுமானத் தேய்வு கொள்விலையில் 5% தளபாடத்திற்கும், 25% வாகனத்திற்கும் வருடத்திற்குச் செய்யப்படவேண்டும்.

3) இடப்பத்திற்கு மாதம் ரூபா 500/- சம்பளமாகக் கொடுக்கப் பட வேண்டும்.

4) 31-12-1984 ல் கொடுக்கப்பட வேண்டிய வான் செலவுகள் ரூபா 600/- முற்பணமாகச் செலுத்திய வாடகை ரூபா 800/- வியாபாரச் செலவுகளுக்குள் அடங்கியுள்ளது.

5) கடன்பட்டோர் கழிவு ஒதுக்கம் ரூபா 2 000/- ஆகக் குறைக் கப்படல் வேண்டும்.

6) கடந்த மூன்று வருட இலாபம் பின்வருமாறு:

1981 இல் ரூபா	90 000/-
1982 இல் ரூபா	86 000/-
1983 இல் ரூபா	76 000/-

7) வேறுவகையில் குறிப்பிடா விட்டால் செலவுகள் காலவரை அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும்.

கீழ்க் காண்பவற்றைத் தயாரிக்கவும்:

அ) 30-6-1984 இல் முடிந்த அரை வருடத்திற்கும் 31-12-1984 இல் முடிந்த வருடத்துக்கும் வியாபார, இலாப நட்டக் கணக்கு.

ஆ) 31-12-1984 இல் உள்ளபடியான ஓர் ஐந்தொகை.

இ) பங்காளரின் நடைமுறைக் கணக்கு (நிரல் முறையில்)

4. தயா, குமார் என்பவர்கள் பங்குடைமை முயற்சியில் பின்வரும் ஒப்பந்தத்துக்கு அமைய முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

1) இலாப நட்டம் முறையே 3 : 2

2) மூலதன வட்டி வருடம் 20%

3) சம்பளம் வருடத்துக்கு தயா 4 800/-, குமார் 3 600/-

4) பங்காளரின் முற்பணத்துக்கான வட்டி வருடம் 20%

5) எடுப்பனவுகளுக்கு வட்டி அறவிடப்படுவதில்லை

30-6-85 இல் சாரா என்பவரை ஒரு பங்காளனாகச் சேர்க்க பங்காளர் முடிவு செய்தனர். நிறுவனத்தின் நன்மதிப்பு ரூபா 15 000/- ஆக மதிப்பிடப்பட்டது. இந்த நன்மதிப்புத் தொகையானது சாரா பங்காளனாகச் சேர்ந்தபின் புத்தகத்திலிருந்து நீக்கப்படுமென முடிவுசெய்தனர். நன்மதிப்புப் பற்றிய சீராக்கங்கள் மூலதனக் கணக்கினூடாகச் செய்யப்படல் வேண்டும். சாராவின் இலாப நட்டப் பங்கு $\frac{1}{4}$ ஆகும். அவர் ஒரு இயங்கும் பங்காளனாகத் தொழிற்படவிருப்பதால் அவரின் மாதச் சம்பளம் ரூபா 400/- ஆகும் இவர் தனது மூலதனமாக ரூபா 20 000/- காசாகவும் ரூபா 30 000/- ஒப்படைவானாகவும் கொடுத்தார்.

31-12-1985 இல் பரீட்சை மீதி

மூலதனம் : தயா			75 000
குமார்			60 000
சாராவின் பங்களிப்பு			50 000
நடைமுறைக் க/கு : தயா		3 000	
குமார்			4 000
எடுப்பனவு : தயா		5 000	
குமார்		4 000	
சாரா		2 000	
ஒப்படை வான்கள் (கொள்விலை)		60 000	
இயந்திரம் (கொள்விலை)		80 000	
தளபாடம் (கொள்விலை)		30 000	

பெறுமானத் தேய்வொதுக்கம் 1-1-85 இல்		
ஒப்படை வான்		10 000
இயந்திரம்		20 000
தளபாடம்		15 000
அ. மு. கடன் ஒதுக்கம் 1-1-85 இல்		2 000
கடன் பட்டோர்	25 000	
கடன் கொடுத்தோர்		18 000
வருமதி உண்டியல்	6 000	
சென்மதியுண்டியல்		8 000
கொள்வனவு (முதல் 6 மாதம் 90 000)	2 15 000	
விற்பனை (முதல் 6 மாதம் 1 20 000)		3 00 000
சரக்கிருப்பு 1-1-85 இல்	20 000	
சம்பளம் (ஊழியர்)		
(முதல் 6 மாதம் 15 000)	36 000	
வாடகை (முதல் 6 மாதம் 1 800)	4 200	
அ. மு. கடன் (முதல் 6 மாதம்)	400	
தில்லறை வருமானம் (பின் 6 மாதம்)		300
உள்வண்டிக் கூலி (முதல் 6 மாதம் 2 000)	5 000	
காசும் வங்கியும்	1 800	
தயாவிள் கடன் 1-7-85 இல்		10 000
குமாரின் கடன் 31-3-85 இல்	10 000	
சாராவின் கடன் 30-9-85 இல்		10 000
பொதுச் செலவுகள்	7 000	
தில்லறைச் செலவுகள்	1 500	
விளம்பரம்	2 400	
வெளிச்சென்ற வண்டிக் கூலி	3 000	
காணி கட்டிடம்	61 000	
	5 82 300	5 82 300

பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு 31-12-1985 இல் முடிவடைந்த வருடத்துக்கான வியாபார இலாப நட்டக் க/கையும் (கால அடிப்படையில்) அத் திகதியில் ஓர் ஐந்தொகையையும் செய்க (நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு உட்படச் செய்க)

1) சரக்கிருப்பு 30-6-85 இல் 25 000/-, 31-12-85 இல் 28 000/-

2) கடன்பட்டோரில் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் 10% ஏற் பாடு செய்க

3) டிசம்பர் 1985 இற்கான வண்டிக்கூலி (உள்) 400/- கொடுக்க மதியாகும்

4) பெறுமானத் தேய்விடுக :

ஒப்படைவான் கொள்விலையில் வருடம் 10%

இயந்திரம் கொள்விலையில் வருடம் 10%
தளபாடம் ஏட்டுப் பெறுமதியில் வருடம் 10 %

5) காலம் குறிப்பிட்டாலன்றி ஏனைய செலவுகள் சமமாகப் பிரிக்கப் படல் வேண்டும்

6) பங்காளர் பற்றிய சரக்கு பின்வருமாறு :
(க/கு களில் பதியப்படவில்லை)

தயா 20-3-85 இலும். 30-8-85 இலும் முறையே 1 000/- 1 500/-

குமார் 10-4-85 இலும். 25-10-85 இலும் முறையே 400/- 600/-
சாரா என்பவர் 30-11-85 இல் 900/-

7) பங்காளர் சார்பாகச் செலுத்திய வருமானவரி பொதுச் செல வில் அடங்கியுள்ளது
தயா சார்பாக 600/- குமார் சார்பாக 800/-

5. கரனும், பரனும் முறையே 2:1 என்ற விகிதத்தில் இலாபநட்டங் களைப் பகிர்ந்து கொள்ளும், உற்பத்தி முயற்சியொன்றில் ஈடு படும் பங்குடைமையின் பங்காளர்களாவர். இதன் முடிவுக் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் திகதியில் தயா ரிக்கப்படுகின்றன. அவர்களின் பங்குடைமை ஒப்பந்தம் பின்வருவ னவற்றை உள்ளடக்கியுள்ளது.

1) பங்காளர்களின் நிலையான மூலதனத்திற்கு 5% வட்டி ஆண்டுக்குக் கொடுக்கப்படவேண்டியதுடன், பற்றுக்கு வட்டி அறவிடப்படக்கூடாது.

2) ஒரு பங்காளர் சேரும்போது அல்லது விலகும்போது நன் மதிப்பு கணிப்பிடப்படின் அதற்கெனப் புறம்பான நன்மதிப் புக் கணக்கெதுவும் ஆரம்பிக்காது, மூலதனக் கணக்குகளினூ டாக செம்மையாக்கப்படல்வேண்டும்.

3) ஒரு பங்காளர் சேரும்போது அல்லது விலகும்போது இலாப நட்டம் வேறு விதமாக கூறப்படாத விடத்து கால அடிப் படையில் கணக்கிடப்படல் வேண்டும்.

1-ஜூலை 1984 இல் தரன் என்ற புதிய பங்காளன் பங்குடைமை யில் அனுமதிக்கப்பட்டான். புதிய இலாப நட்டம் பகிரும் விகிதமானது 3:2:1 என இணங்கப்பட்டதுடன் ஏனைய ஏற் பாடுகள் முந்திய ஒப்பந்தத்தின் பிரகாரமே இருந்தது.

31 டிசெம்பர் 1984ல் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மூலதனம் : கரன்		1 50 000
பரன்		1 00 000
தரன்		88 000
நடைமுறைக் கணக்கு — கரன்		12 580
பரன்		14 750
உற்பத்திக் கணக்கு (ஆக்கப் பொருட்செலவு)	2 16 000	
முடிவுப்பொருட் கையிருப்பு 31-12-83 ல்	41 600	
வங்கி மீதி	32 000	
கடன்பட்டோர்	75 000	
அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம்		2 000
விற்பனைகள்		3 14 000
விற்பனைத் திரும்பல்கள்	5 400	
இறையில் காணிகட்டிடம்	1 60 000	
இறையில் சொத்துக்கள்	58 000	
முதலீடுகள் – கொள்விலையில்	31 200	
சம்பளங்கள்	14 210	
சில்லறைச் செலவுகள்	1 000	
முதலீட்டு வருமானம்		1 000

பொதுச்செலவுகள்	12 000		
கணகாய்வுக் கட்டணம்	1 050		
குறைவேலைகள் 31-12-84 ல்	35 450		
மூலப்பொருள் இருப்பு 31-12-84 ல்	26 000		
கடன் கொடுத்தோர்		37 330	
அறவிடமுடியாக் கடன்	1 200		
காப்புறுதி	640		
விளம்பரச் செலவுகள்	2 350		
காகிதாதிகளும் எழுதுபொருட்களும்	1 600		
கழிவுகள்	760	840	
உபகரணங்கள்	12 500		
பொறிவிருட்சம்	26 500		
பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள்:			
பொறிவிருட்சம் 31-12-84 ல்		6 400	
உபகரணங்கள் 31-12-84 ல்		3 800	
இறையில் சொத்துக்கள் 31-12-83 ல்		7 300	
இறையில் காணிகட்டிடம் 31-12-83 ல்		17 800	
வாடகையும் இறையும்	1340		
	7 55 800	7 55 800	

பின்வரும் மேலதிக தகவல்கள் பெறத்தக்கவையாகவுள்ளன.

1. 31 டிசெம்பர் 1984 ல் இருந்தவாறான முடிவுப் பொருட்கை யிருப்பு40000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது.

2. 1 ஜூலை 1984 ல் பங்குடைமையின் நன்மதிப்பு 54000 ரூபா வெனப் பெறுமானமிடப்பட்டது. இதற்கான சீராக்கங்கள் இன்னமும் ஏடுகளில் செய்யப்படவில்லை. தரனின் மூலதனக் கணக்கு மீதி 88000 ரூபாவும் அவரின் நன்மதிப்புத் தொகையையும் உள்ளடக்கியதாகும்.

3. அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் கடன்பட்டோர் தொகை யில் 5% க்குச் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

4) முதலீடுகளானவை 1 ஏப்ரல் 1984 ல் கொள்வனவு செய்யப் பட்டவை. இதற்கான ஆண்டு வட்டிவீதம் 10%மாகும்.

5) 1984 டிசெம்பர் 31 ல் நிலுவையாகவுள்ள வாடகையும் இறையும் ரூபா 160/-. முற்பணமாகக் கொடுத்த காப்புறுதி ரூபா 40/-

6) பெறுமானத் தேய்வுக்கான பொறுப்பொதுக்கமானது கொள் விலை அடிப்படையில் பின்வரும் வீதங்களில் ஏற்பாடு செய் யப்படல்வேண்டும்.

இறையில் காணிகட்டிடம்	2%
இறையில் சொத்துக்கள்	10%

7) 31 டிசெம்பர் 1984 ல் நிலுவையாயிருந்த பொதுச்செலவு 1300 ரூபாவுக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை.

8) வியாபார நிறுவனத்தின் வங்கிக் கணக்கினூடாக டிசெம்பர் மாதத்தில் செலுத்தப்பட்ட கரன், பரன் பங்காளர்களின் சொந்த ஆயுட்காப்புறுதிக் கட்டணங்களான 1·200 ரூபா 1000 ரூபா (முறையே) ஏடுகளில் பதியப்படவில்லை.

9) சகல வருவாய்களும் செலவுகளும் காசு அடிப்படையில் சம மாக ஏற்பட்டவை எனக் கொள்க.
வேண்டப்படுவன:

அ) 31 டிசெம்பர் 1984 ல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் கணக்கு

ஆ) பங்காளர் நடைமுறைக் கணக்குகளும், மூலதனக் கணக்குகளும் நிரல்வடிவில்

இ) அத்திகதியிலுள்ளபடியான ஐந்தொகை

6. ஒரு வியாபாரத்தை நடத்தும் ரவி, புவி என்ற பங்காளிகள் 1977 ஜூன் 30 இல் கவி என்பவரை பின்வரும் நிபந்தனைகளுக் கமைய சேர்த்துக் கொண்டனர்.

1) கவி காசாக 30 000/- மூலதனத்தை கொண்டுவருதல் வேண் டும். இதில் 5 000/- நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப் படுதல் வேண்டும்

2) மூலதனத்திற்கு வருடம் 5% வட்டி அனுமதிக்கப்பட வேண்டும்.

3) புதிய பங்காளி சேர்ந்தபின் இலாப நட்டம் 2:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படல் வேண்டும்.

4) புதியவரை சேர்க்கும் போது நன்மதிப்பு 10 000/- ஆக மதிப்பிடப்பட்டு நன்மதிப்புக் கணக்கு திறக்கப்பட வேண்டும் என இணங்கப்பட்டது.

31-12-1977 இல் பரீட்சைமீதி வருமாறு

தொக்கு 1-1-77	12 000	
கட்டிடம் காணியுட்பட (கொள்விலை)	3 00 000	
உட்திருப்பம்	3 116	
பொதிகட்டல் செலவு	514	
5% வங்கிக்கடன்		60 000
முதலீட்டு வருமானம்		6 000
அலுவலக உபகரணம் கொள்விலை	80 000	
உள்வந்த வண்டிக்கூலி	4 000	
மோட்டார் வாகனம் கொள்விலை	1 00 000	
பெற்ற வட்டி		4 100
வெளித்திருப்பம்		2 013
கடைப் பொருத்துத் தே. ஒது 1-1-77		2 000
மோட்டார் தேய்வொது 1-1-77		40 000
கட்டிடத் தேய்வொதுக்கம் 31-12-77		120 000
கட்டிடத் தேய்வு	4 120	
வங்கி வட்டி	1 500	
அறவிடமுடியாக்கடன்	200	
விற்பனைச் செலவு	2 470	
காசு	2 000	
விற்பனையாளர் வேதனம்	750	
வழக்கறிஞர் கட்டணம்	1 800	
கடைப் பொருத்துக்கள் (கொள்விலை)	10 000	
நடைமுறைக் கணக்கு ரவி	4 000	
புவி		3 500

15% ஈட்டுக்கடன்		90 000
10% முதலீடு	40 000	
க. படுநர் க. கொடுத்தோர்	54 000	35 000
விற்பனை		3 96 000
வரு. உண்டியல் சென். உண்டியல்	8 000	27 000
அ. மு. க. ஒதுக்கம்		4 050
கொள்வனவு	2 54 375	
கழிவு	783	635
காப்புறுதி	800	
அச்சிடல் அலுவலகச் செலவு	5 870	
மூலதனம் ரவி		70 000
புவி		30 000
	8 90 298	8 90 298

பின்வரும் தகவல்கள் உமக்கு கொடுக்கப்பட்டுள்ளன

அ) 31-12-77 இல் கையிருப்பு 5190/-

ஆ) விற்பனையில் 40% முன் ஆறுமாதத்திற்கு உரியது.

இ) அறவிட முடியாக் கடனுக பதிவழித்த தொகையில் ¼ பங்கு திரும்பக் கிடைத்தது. இது 28-12-77 இல் நடைபெற்றது. இதற்கான பதிவுகள் ஏதும் இடம் பெறவில்லை.

ஈ) விற்பனைச் செலவினுள் 170/- பொதுச் செலவுக்கு உரியதாகும்.

உ) பங்குடைமை தொடர்பாக ரவி என்பவர் 100/- சில்லறைச் செலவினைத் தனது பணத்திலிருந்து செலவு செய்தார்.

ஊ) 3 மாத வருமதி உண்டியலொன்று 1000/- பெறுமதியானது முதிர்வடைவதற்கு 1 மாதத்திற்கு முன் 1-12-77 இல் 24% கழிவுடன் வங்கியில் மாற்றப்பட்டது. இதற்கான பதிவுகள் எதுவும் இடம் பெறவில்லை.

எ) 31-12-77 இல் முற்பணக் காப்புறுதி 50 ரூபா செலுத்தப் பட்டுள்ளது.

ஏ) அலுவலக உபகரணம் வருட இறுதியில் 75 000 ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐ) 1-1-75 இல் 3 000 ரூபா விலையில் வாங்கப்பட்ட கடைப் பொருத்துக்கள் 30-9-77 இல் 2 000 ரூபாவுக்கு ரவி ஏற் றுக் கொண்டார்.

ஒ) கடன்பட்டோரில் 2% அறவிடமுடியாக்கடனுக்கு ஏற்பாடு செய்க.

ஓ) பின்வருமாறு ஆண்டுக்கு தேய்விடுக.

கடைப் பொருத்துக்களுக்கு மாருப்பாக முறையில் 10% மோட்டார் வாகனத்துக்கு ஒடுங்குபாக முறையில் 20 % தேய்விடுக

தயார் செய்க

31-12-77 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக் கணக்கு

31-12-77 இல் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக் கணக்கு

31-12-77 அன்றுள்ளபடி ஐந்தொகை

7. 1986, புரட்டாதி 30 ஆம் திகதியன்று அப்துல்லா, காதர் என்ற வியாபாரிகளின் புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு:

இவர்கள் இலாபநட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொண்டார்கள். அப்துல்லா வருடம் 2000 ரூபாவும் காதர் வருடம் 2500 ரூபா வும் சம்பளமாகப்பெறுகின்றனர். பற்றுக்குவட்டி 5% மூலதனத்திற்கு வட்டி 5% இவர்களது மூலதனம் நிலையானதாக இருக்க வேண்டும்.

மூலதனம்		
அப்துல்லா		30 000
காதர்		24 655
வங்கி	18 510	

காசு	390	
காணி கட்டிடம்	20 000	
இருப்பு: மூலப் பொருள்	2 150	
முடிவடையாப்பொருள்	5 610	
முடிவடைந்தபொருள்	3 140	
வெளியனுப்பொப்படை	5 000	
கொள்வனவு	12 140	
ஒப்படைச் சரக்கு		4 800
விற்பனை		25 640
கூலி	4 120	
வண்டிக்கூலி, இறக்குமதிவரி	6 210	
கொடுத்த கழிவு	260	
பெற்ற கழிவு		1 520
கடன்பட்டோர்	5 440	
கடன்கொடுத்தோர்		2 760
வருமதி உண்டியல்	1 250	
மின்சாரம்	350	
காகிதாதிகள்	150	
விளம்பரம்	2 750	
பெற்றவாடகை		2 800
வங்கிக் கடன்		20 000
இறையும் வரியும்	2 250	
காப்புறுதி	1 950	
மோட்டார் வான்	6 800	
எரிபொருள்	545	
அறவிட முடியாக்கடன்	150	
தொழிற்சாலை ஆள்வோன் சம்பளம்	2 400	
வங்கியாவிடம் பெற்ற பணம் (ஒப்படை கொள்வோன்)		7 000
பொறி, பொறித் தொகுதி	15 500	
பொறி, பொறித் தொகுதி பெறுமானத் தேய்வு ஒதுக்கம்		3 100
சம்பளம்	4 210	
காதருக்காக செலுத்திய வருமானவரி	1 000	
	122 275	122 275

1) இறுதி இருப்பு: மூலப் பொருள் 5 810
முடிவடையாத முடிவுப்பொருள் 6 870
முடிவடைந்த பொருள் 2 450

2) விளம்பரத்தில் ½ பங்கை அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்ல

3) தொழிற் ஸ்தாபனத்தில் ஒரு பகுதியை வாடகைக்கு கொடுத்த வகையில் பெறும் வருட வாடகை 2 400 ரூபா

4) காப்புறுதி உற்பத்திச்சாலை 450, கந்தோர் 1500.
கொடுக்க வேண்டிய கந்தோர்க் காப்புறுதி 150 ரூபா.
முற்பணமாகக் கொடுத்த உற்பத்திச்சாலைக் காப்புறுதி 100 ரூபா.

5) அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்தை 240 ரூபா ஆக்குக.

6) பொறிவிருட்சம், பொறித்தொகுதி பெறுமானத் தேய்வுக்கு 550 ரூபாஒதுக்குக

7) அப்துல்லா வியாபாரம் சம்பந்தமாகச் செய்த பிரயாணச் செலவு 600 ரூபாவைத் தன் சொந்தப்பணத்திலிருந்து செல விட்டுள்ளார்

8) 1-12-85 இல் ஹனிபாவுக்கு 80 பெட்டி சரக்குகள் பெட்டி ரூபா 60 வீதம் ஒப்படை விற்பனையில் அனுப்பப்பட்டது. இச் சரக் குகளை அனுப்புவதற்கு அப்துல் காதரின் செலவு 200 ரூபா. ஹனிபா விற்பனையில் 2½ % தரகுக்கும் 2½ % பொறுப்புத் தர கிற்கும் உரிமையுடையவர்

9) 30 - 9 - 86 இல் ஹனிபா அனுப்பிய விற்பனைக் க/கு பின்வரு மாறு காட்டியது விற்பனை 80 பெட்டி (ரூபா 100 வீதம்) 8000 ரூபா விற்பனைச்செலவு 600 ரூபா, தரகு 400 ரூபா ஹனிபா விற்பனைக் கணக்குடன் அனுப்பிய காசோலை ரூபா 7000 மட்டும் கணக்கில் பதியப்பட்டது. இதைத் தவிர மற்றைய பதிவுகள் க/கு களில் பதியப்படவில்லை.

10) கந்தோர் ஆள்வோன் தேறிய இலாபத்தில் 10% தரகுக்கு (தரகு கழித்து வரும் தேறிய இலாபத்தில்) உரிமையுண்டு

11) கடன்பட்டோரில் ஒருவரான அப்பையாவின் காசோலை 200 ரூபா வங்கியால் மறுக்கப்பட்டு 12-10-85 இல் திருப்பி அனுப் பப்பட்டது. இக்கடனை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிக் குக.

30-9-86 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந் தொகையையும் தயார் செய்க.

8. 1) கர்ணன், பண்டா என்னும் இரு பங்காளர் இலாப நட்டத்தை 3:? என்னும் விகிதத்தில் பங்கிட்டுக் கொள்கிறார்கள். புதிய பங்காளனைச் ஸ்மித் என்பவனைச் சேர்க்கத் தீர்மானித்து நன்மதிப்பாக 10000 ரூபா காசாகவும், மூலதனமாக 20000 ரூபாவும் கொண்டுவரும்படி பணித்து அவனுக்கு இலாபத்தில் 50% கொடுக்க உடன்பாடு செய்யப்பட்டது.

2) பங்காளர் முறையே 2000, 3000, 1000 காசாகப் பற்றிக் கொள்ளவும், அதற்கு மேற்பட பற்றிக் கொள்ளும் தொகைக்கு 5% வட்டி வழங்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. பங்காளருக்கு சம்பளமாக 1000, 1000, 500 ரூபா வழங்கவும், மூலதனத்திற்கு வட்டி 2% அறவிடவும் உரிமையுண்டு.

31 - 12 - 88 இல் அவர்களது புத்தகங்களில் இருந்து எடுத்த மீதி, கர்ணன், பண்டாவின் (ஸ்மித்பங்காளனைச் சேருமுன் உள்ள) மூலதனம் 3:2 என்னும் விகிதத்தில் காணப்பட்டது.

கடன் கொடுத்தோர் 1 - 1 - 88 இல்	10 000
காசுக் கொள்வனவுகள்	5 000
பற்று - கர்ணன்	2 500
பண்டா	3 000
ஸ்மித்	1 500
அஞ்சற்செலவு, தொலைபேசி	2 500
கு. கொடுத்தோருக்கு கொடுத்தகாசு	50 500
வியாபாரக் கடன்பட்டோர் 1 - 1 - 88 இல்	15 000
கையிலுள்ள காசு	1 000
சம்பளங்கள்	7 500
வியாபாரக் கடன்பட்டோரிடம் பெற்றகாசு	90 000
இயந்திரம்	33 500
கையிருப்பு 1 - 1 - 88 இல்	7 750
வியாபாரச் செலவு	650
கொள்வனவுத் திரும்பல்கள்	1 050
தளபாடம்	17 000
நடைமுறைக் கு/கு: கர்ணன் செலவு மீதி	700
பண்டா வரவு மீதி	500
~~ஸ்மித் செலவு மீதி~~	~~1 000~~
பெற்ற கழிவு	550

விளம்பரம்	1 500
பெற்ற தரகு கூலி	1 950
கணக்குப் பரிசோதனைக் கட்டணம்	500
கர்ணனுக்காக கொடுத்த வருமானவரி	750
நன்மதிப்பு	10 000
விற்பனைச் செலவுகள்	2 000
போக்குவரத்துச் செலவு	1 750
வங்கி மீதி	5 000
நில்லறை வருமானம்	6 050
காசு விற்பனை	8 100

மேற்கூறிய விபரங்களில் இருந்து காதர், பண்டா இருவரது மூலதனங்களையும் நிச்சயிக்க.

1) தளபாடத்திற்கு பெறுமானத் தேய்வு 2% இயந்திரப் பெறுமானத் தேய்வு 700 ரூபா

2) கையிருப்பு 10 000 ரூபா,

3) வியாபாரக் கட்ன்பட்டோன் 31 - 12 - 88 இல் 10 000 ரூபா வியாபாரக் கடன் கொடுத்தோர் 31 - 12 - 88 இல் 20 000 ரூபா

4) போக்குவரத்துச் செலவில் ஸ்மித்தின் சொந்தப்போக்கு வரத்துச் செலவு 250 ரூபா அடங்கியுள்ளது.

5) விளம்பரச் செலவில் 250/- 89 ஆம் வருடம் சம்பந்தமானது.

6) வங்கி மீதி 88 டிசம்பர் 31 இல் 6400 ரூபாவாகக் காட்டியது

7) காசேட்டில், வங்கி பங்குடைமையின் பேரில் திரட்டிய பங்கு லாபம் 700 ரூபாவும், வங்கித்தரகு 300 ரூபாவும் பங்குடைமையின் பேரில் நாதன் ஸ்ரோஸ் கட்டிய 1000 ரூபாவும் பதிவு செய்யப்படவில்லை.

தயாரிக்குக:-

1) 31 - 12 - 88 இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபார, இலாப நட்டக்கணக்கு

2) 31 - 12 - 1988 இல் உள்ளவாறான ஐந்தொகை.

9. குரு, சாந்தன் ஆகிய இருவரும் ஒரு உற்பத்தி வியாபார நிலைய மொன்றை நடாத்தி வருகின்றனர். இவர்களிடையே பின்வரும் உடன்படிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

1) குருவும் சாந்தனும் இலாப நட்டங்களை 3:2 எனப்பகிர்தல்

2) மூலதன வட்டி 8% ஆகவும் பற்றுவட்டி 6% ஆகவும் இருக்க வேண்டும்.

3) நிறுவனத்தின் பொறுப்பான நிர்வாகத்தில் ஈடுபடும் குருவுக்கு வருடம் 8400/- வெகுமதி வழங்கப்பட வேண்டும்

4) ஏதாவது சூழ்நிலையில் நன்மதிப்பு மதிப்பிடப்படினும் அதனை புத்தகங்களில் தொடர்ந்திருக்க விடுவதில்லை

இவர்களின் 31-12-87 இல் பேரேட்டு மீதிகள் பின்வருமாறு

பங்காளிகளின் பங்களிப்பு	குரு		500 000
	சாந்தன்		500 000
	இந்திரன்		475 000
	லஷ்மணன்		400 000
நடைமுறைக்கணக்கு	குரு		12 500
	சாந்தன்		11 000
பொறி இயந்திரங்கள் (கொ. வி)		750 000	
தளபாடங்கள் (கொ.வி)		200 000	
விற்பனைகள்			39 50 000
இருப்புக்கள் 31-12-87 இல்			
மூலப்பொருள்		1 85 000	
நடைபெறும் வேலை		76 000	
முடிந்த பொருட்கள் (1-1-87)		104 000	
அட்டுறுவும் முற்பணமும் (31-12-87)		17 500	26 500
மோட்டார்திகள் (கொள்விலை)		380 000	
20% கம்பனி முதலீடு		250 000	
ஆக்கிய பொருளின் கிரயம்		18 75 000	
செலுத்திய விற்பனை வரி		19 800	
கடன் படுநர் கொடுநர்		1 67 000	1 93 000

அ. மு. கடன்கள்	11 500	
அ. மு. கடன் ஏற்பாடுகள்		4 500
முடிவுற்ற பொருட்கொள்வனவு	6 95 000	
தேய்மான ஏற்பாடுகள்		
தளபாடம் 31-12-86		67 000
மோட்டார் 31-12-86		42 500
பொறி 31-12-86		2 40 000
நிர்வாக செலவீடுகள்	48 900	
விற்பனை செலவீடுகள்	27 400	
நன்மதிப்பு	100 000	
வட்டியும் ஏனைய நிதிக் கொடுப்பனவும்	14 000	
பங்கிலாபங்கள்		18 000
வங்கியும் காசும்	2 93 000	
தாபன பொதுச்செலவீடு	64 200	
சட்டச் செலவீடு	7 500	
தியாலழிந்த சரக்கு	8 000	
கழிவீடுகள்	7 500	7 800
சில்லறை வருமானங்கள்		1 24 000
பொது ஒதுக்கீடுகள்		50 000
காணி கட்டிடம்	10 00 000	
கட்டிடத் திருத்தம்	1 80 000	
சம்பளங்கள்	1 30 000	
மின்னும் இறையும்	3 500	
வாடகை	7 000	
	66 21 800	66 21 800

1) 30-6-87 இல் நிறுவனத்தை விஸ்தரிக்க முயன்ற போது இந்திரன், லஷ்மணன் ஆகியோர் பங்காளராக்கப்பட்டனர். இதன் பின் இலாப வீதம் 3:3:2:2 என முறையே குரு, சாந்தன், இந்திரன், லஷ்மணன் ஆகியோரிடையே பகிர உடன்பட்டனர்.

2) புதிதாக நிர்வாகத்தை மேற்கொண்ட சாந்தனுக்கும் லஷ்மணனுக்கும் எல்லாச் செலவுகளும் கழித்த இலாபத்தில் 4% னைச் சரிசமகொடுப்பனவாக்க வேண்டும் எனவும் நன்மதிப்பீனை 2 50 000 ரூபா என மதிப்பிடுவதுடன் பழைய தொகையையே புத்தகத்தில் இருக்க விடுவதெனவும் உடன்பட்டனர்.

3) புத்தகத்தில் காட்டப்படாததும் 20-12-87 இல் கொள்வனவு செய்யப்பட்டதுமான ரூபா 32 000 பெறுமதியான மூலப் பொருட்கள் 31-12-87 வரை பெறப்படாதிருந்தன.

4) நிறுவன ஒதுக்கீடுகள் பின்வருமாறு
ஓடுங்கு மீதியில் மோட்டார் 10%
தளபாடம் 8%
பொறி 15%
அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு வருட இறுதி மீதியில் 8%

5) பங்காளரில் குரு ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் 400 ரூபாவும் சாந்தன் ஒவ்வொரு மாத இறுதியில் 250 ரூபாவும் லக்ஷ்மணன் ஒவ்வொரு மாத நடுப்பகுதியில் 300 ரூபாவும் இந்திரன் ஒவ்வொரு மாத இறுதியில் 400 ரூபாவும் ஏடுகளில் காட்டாது பற்றியிருந்தனர்.

6) ரூபா 80 000 கொள்விலையுடையதும் 1-4-85 இல் கொள்வனவு செய்யப்பட்டதுமான மோட்டார் தேவைக்கு மேலதிகமானதால் 68 000 ரூபா பெறுமதியில் ஏற்றுக் கொள்ளச் சாந்தன் இணங்கியிருந்தார். 31-12-87 இல் கொடுப்பனவு தீர்க்கப்பட்டபோது பெற்றதொகை சில்லறை வருமானமாக மட்டும் காட்டப்பட்டிருந்தது.

7) பொறித்தொகுதிகளின் தேய்வில் 80% உற்பத்திகளுக்காக கணிக்கப்படவேண்டும். அத்துடன் பின்வரும் செலவுகளில் 60% உற்பத்திக்கும் 40% வியாபாரப் பகுதிக்குமாக பகிர வேண்டும்.
தளபாடத்தேய்வு, பொதுச் செலவீடு, சம்பளங்கள்

8) கம்பனியில் 1-7-87 லேயே முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 1-7-87 இல் இருந்து பொது ஒதுக்கத்தை நீக்கிக் கொள்வதெனவும் முடிவு செய்தனர்.

9) தொழிலாளருக்குக் கொடுத்த முற்பணம் 48 000 ரூபா சில்லறை வருமானமாகக் காட்டப்பட்டது.

10) நிறுவனம் பின்வருவனவற்றை செலுத்த வேண்டியிருந்தது.
காப்புறுதி மாதாந்தம் 800 ரூபா
மின்சாரம் 2 500 ரூபா
வாடகை 3 000 ரூபா

11) உற்பத்தியில் பழுதடைந்த 30 000 ரூபா பெறுமதியான முடிந்த பொருட்கள் கணக்குகளில் காட்டப்படவில்லை.

12) மொத்த விற்பனையில் 60 சதவீதம் 1-7-87 ற்குப் பின் ஏற்பட்டதாகும்.

13) 31-12-87 அன்று முடிவடைந்த பொருட்கள் ரூபா 1 26 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

10. சீமாட்டிகள் x, y, z என்பவர்கள் ஒரு நிறுவனத்தின் பங்காளர்கள். இந்நிறுவனம் அலுவலக உபகரணங்களை விற்பனவு செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. முறையாக கணக்குகள் பராமரிக்கப்பட்டதுடன் சீமாட்டி x னால் முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன.

31 - 12 - 1980ல் முடிவடைந்த 1 ஆம் ஆண்டுக்கான திருமதி x னால் தயாரிக்கப்பட்ட முடிவுக் கணக்குகள் வருமாறு:

வருமானக் கணக்கு	ரூபா	ரூபா
முடிவுற்ற தொழிலினால் வருமானம்		15 000
மேலதிகச் செலவுகள்	4 200	
சீமாட்டி x இடம் பெற்ற கடன் வட்டி (10%)	300	
கணக்குகளை பராமரிப்பதற்கு சீமாட்டி x க்கு வழங்கிய கூலி	500	
பற்று (பங்காளருக்கிடையில் சமமாக உள்ளது)	6000	11 000
		4000

பகிர்வுகள்:	மூலதனவட்டி	இலாபம்	மொத்தம்
சீமாட்டி x	50	1 880	1 930
,, y	70	940	1 010
,, z	120	940	1 060
	240	3 760	4 000

ஐந்தொகை

மூலதனம்	x	y	z	நிலையான சொத்து	5 000
இடப்பட்டது	500	700	1 200	நடைமுறை ,,	5 670
இலாபம்	1 930	1 010	1 060		
	2 430	1 710	2 260		
x		6 400			
கடன் சீமாட்டி x		3 000			
நடைமுறை பரிப்பு		1 270			
		10 670			10 670

கேட்கப்படுவது:

பங்குடைமை ஒப்பந்தம் ஒன்று இல்லாத நிலையில், பங்குடைமைச் சட்டத்தைப் பிரயோகித்து, அதற்கிசைவாக முடிவுக் கணக்குகளை வடிவமைக்கவும்.

11. பாபு என்பவர் தனது வங்கிக் கணக்கிலிருந்த 40,000 ரூபாவுடன் 1-1-88ல் இருந்து தொழில் நடாத்தி வந்தார். இவரது கொடுக்கல் வாங்கல்கள் காசோலை மூலமே நடைபெற்று வந்தன. 1-4.88 ல் ராஜன் என்பவர் $\frac{1}{5}$ பங்கு இலாபத்தைப் பெறும் நோக்குடன் 35000 ரூபா பணத்தையும் மதிப்பிட்ட நன்மதிப்புக்காக 15000 ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றையும் வழங்க இணங்கினர், ராஜன் இணைந்த போது பின்வரும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக் கொண்டனர்.

1. நிர்வாகத்தில் இருவரும் ஈடுபடுவதுடன் பாபுவுக்கு மாதாந்தம் 400 ரூபாவும் ராஜனுக்கு 300 ரூபாவும் கொடுத்தல்
2. நிலையான முதல் 10% வட்டியை பெற உரித்துண்டு
3. புதிய பங்காளன் இணையின் அல்லது பங்காளி எவரும் நீங்கின் நன்மதிப்பு கணக்கு உருவாக்குவதில்லை.
4. பாபுவின் வங்கிக்கணக்கையே தொடர்ந்தும் பயன்படுத்தல்
1.7.88 ல் பாபுவுக்கு கடன் வழங்கியவரும் விற்பனை முகவராகத் தொழிற்பட்ட கோபு என்பவர் பங்காளியாக்கப் பட்டார். மேலதிகமாக ரூ 10000 கொடுத்துதவினர் கோபுவுக்குரிய நன்மதிப்புத்தொகை 6000 ரூ அவரால் செலுத்த முடியாதிருந்தது. கோபுவின் வருகையின் பின்னர் இலாப வீதம்

பாபு, ராஜன் கோபு முறையே $\frac{2}{5}$ $\frac{2}{5}$ $\frac{1}{5}$ எனப் பகிர ஒத்துக்கொண்டனர்.

31-12-88 வரை அவர்களின் வங்கிக் கூற்றின் சுருக்கம் பின் வருவனவற்றைக் காட்டியது.

பெறுகைகள்		கொடுப்பனவுகள்	
2-1-88 மீதி	40 000	க.கொடு.கொடுத்தது.	60 800
1-3-88 வைப்பு, (கோபுவிடம் பெற்ற காசு)	20 000	தளபாடம்	20 000
		வாடகை	3 000
1-4-88 வைப்பு கடன்படுநரிடமிருந்து பெற்றவை	35 000	கூலியும் ஏனைய செலவுகளும்	4 200
	1 17 000	தரகு	5 100
1-7-88	10 000	விற்பனைசெலவு	4 250
		சில்லறைச் செலவு	2 500
		பாபுவின் எடுப்பனவு	1 600
		காணி கட்டிடம்	30 000
		பொதுச்செலவு	3 000
		விற்பனைவரி	1 500
		காப்புறுதி	2 000
		மீதி / கீ / கொ / செ	84 050
	2 12 000		2 12 000

தமது கணக்கீடுகளில் பின்வரும் முறைகளைப் பின்பற்றினர்

1) தளபாடத் தேய்வு நேர்கோட்டில் 8% வாகனம் 15% அ.மு. கடனுக்கு வருட இறுதி மீதியில் 5% ஒதுக்குக.

2) வருட இறுதியில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன. தொக்கு 19 400 விநியோகஸ்தர்களுக்கு வழங்க வேண்டியது 17 000 விநியோகஸ்தர் செலுத்தவேண்டியது ரூ. 24500. செலவீட்டுக் கடன் கொடுமதியாளர் ரூ 4250

3) வியாபார இலாபம் கால அடிப்படையில் பங்கிடப்பட வேண்டும்

4) கோபு விற்பனை முகவராக தொழிற்படும் காலத்திற்கு கமிசனாக 800 ரூபாவை மாதாந்தம் பெற உரித்துடையவர்

5. கடன்படுதரிடம் பெற்ற பணத்தில் பின்வரும் கொடுப்பனவு போக மீதிக் கொகையே வங்கியில் இடப்பட்டது,

அ) மின்கட்டணம் 1 900

ஆ) கொள்வனவுக்கூலி 2300

இ) விளம்பரச் செலவு 3700

ஈ) கோபுவின் சார்பில் அனுதை நிறுவன கொடை 1500

உ) கொள்வனவுகள் 5000

வினை:- 31-12-88 இல் முடிந்த வருடத்திற்குரிய வியாபார இலாப நட்ட கணக்கும் பங்காளர் நடைமுறைக் கணக்கும் ஐந்தொகையையும் தயாரிக்குக

பங்குடைமைக் கலைப்பு

1. x.y.z ஆகிய பங்காளர்கள் இலாப நட்டங்களை 5:3:2 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்கள். இவர்களின் 31-12-87 ல் ஐந்தொகை பின்வருமாறு.

31-12-87 ஐந்தொகை

மூலதனம் x	42 000	நிலம் கட்டிடம்	37 000
y	36 000	தளபாடம்	19 600
z	30 000	சரக்கு	29 200
பொது ஒதுக்கம்	8 200	கடன்பட்டோர்	12 400
கடன் கொடுத்தோர்	27 300	வங்கி	45 300
	1 43 500		1 43 500

இத்திகதியில் பங்குடைமை கலைக்கப்பட்டது. நிலம் கட்டிடம் 38 500 க்கும் சரக்கு 30 000 ரூபாவிற்கும் விற்கப்பட்டது. தளபாடத்தில் அரைப்பங்கை 10 600 ரூபாவிற்கு விற்றனர். மீதியை z ஏற்றுக் கொண்டார். கலைப்புச் செலவு 900 ரூபா. கலைப்புத் தொடர்பான கணக்குகளை தயாரிக்கவும்.

2. சில்வா, பெரேரா ஆகியோர் இலாப நட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்கள். 31-3-88 ல் இவர்களின் ஐந்தொகை பின்வருமாறு இருந்தது

31-3-88 ல் ஐந்தொகை

மூலதனம் சில்வா	45 000	நிலம் கட்டிடம்		13 000
பெரேரா	30 000	பொறி இயந்திரம்		25 000
10 % பெரேராகடன்	10 000	மோட்டார்		35 000
கடன் கொடுத்தோர்	12 000	க. பட்டோர்	12000	
வ. மே. பற்று	6 000	அ. மு. ஒது	1 000	11 000
		முதலீடு		10 000
		காசு		2 000
		சரக்கு		7 000
	10 3 000			10 3 000

மேற்குறிப்பிட்ட திகதியில் பங்குடைமை கலைக்கத் தீர்மானிக்கப் பட்டது. சொத்துக்கள் பின்வருமாறு விற்றுத்தேறின.

பொறி இயந்திரம் 22000 ரூபாவிற்கும் காணி கட்டிடம் 15000 ரூபாவிற்கும் மோட்டார் 34000 ரூபாவிற்கும் தேறின

சரக்கை பெரேரா பொறுப்பேற்றார். கடன்பட்டோரிடம் இருந்து 1000 ரூபா நீக்கி மீதி கிடைத்தது. கடன் கொடுத்தோர்க்கு 5% கழிவு நீக்கி பணம் கொடுக்கப்பட்டது.

1) தேறியபணக் கணக்கு 2) பங்காளக் மூலதனக்கணக்கு

3) காசுக்கணக்கு ஆகியவற்றை செய்து காட்டவும்.

3. ஜோன், மேரி என்ற பங்குடைமையின் பங்காளர்கள் இலாப நட்டத்தை சமமாகப் பங்கிடுவர். அப் பங்குடைமையின் 31-5-89 இல் உள்ளவாறான ஐந்தொகை பின்வருமாறு காணப்பட்டது :

ஜோன்	15 352	நிலையான சொத்துக்கள்	16 435
மேரி	11 530	இருப்பு	8 762
கடன் கொடுத்தவர்கள்	12 465	கடன்பட்டோர்	12 900
		வங்கி	1 250
	39 347		39 347

1-6-89 இல் பின்வரும் நிகழ்வுகளுடன் பங்குடைமை கலைக்கப் பட்டது,

1) நிலையான சொத்துக்கள் ரூபா 15 000 த்திற்கு விற்பனை செய்யப்பட்டது

2) இருப்பு 7 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது

3) கடன்பட்டவர்களிடமிருந்து 12 450 ரூபா பெறப்பட்டது

4) கடன் கொடுத்தவர்களுக்கு 12 200 ரூபா செலுத்தப்பட்டது

விஞ : பங்குடைமையின் எல்லாக் கணக்குகளையும் மூடுக

4. நாதன், குகன் ஆகியோர் இலாபநட்டங்களை 2 : 1 என்னும் விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவர். இவர்கள் 1989 மார்ச் 31 இல் தமது பங்குடைமையை கலைக்கத் தீர்மானித்தனர். அத்திகதியில் நிறுவனத்தின் ஐந்தொகை பின்வருமாறு இருந்தது.

1989 மார்ச் 31 இல் ஐந்தொகை

மூலதனக்கணக்கு		காணிகட்டடம்	250 000
நாதன்	290 000	உபகரணங்கள்	150 000
குகன்	247 500	மோட்டார்வான்	20 000
கடன்கொடுத்தோர்	76 500	இருப்பு	130 000
வங்கிமேலதிகப்பற்று	23 500	கடன்பட்டோர்	87 500
	637 500		637 500

1) கலைப்பின்போது நிறுவனத்தின் சொத்துக்கள் பின்வரும் பெறுமதிக்கு தேறின

காணிகட்டடம்	525 000
உபகரணங்கள்	70 000
மோட்டார்வான்	9 000
இருப்பு	117 500
கடன்பட்டோர்	86 000

2) கலைப்புச்செலவு 25 550 ரூபா. பங்குடைமை கலைப்புச் சம்பந்தமான கணக்குகளை செய்துகாட்டவும் (தேறியபணக் கணக்கு வங்கிக்கணக்கு, மூலதனக்கணக்கு, கடன்கொடுத்தோர்கணக்கு)

5. மூர்த்தியும் கீர்த்தியும் இலாபநட்டங்களைச் சமமாகப் பங்கிடும் பங்காளர்களாவர். 31 - 12 - 87 இல் இவர்கள் பங்குடைமையைக் கலைக்கத்தீர்மானித்தனர். அத்திகதியில் அவர்களின் ஐந்தொகை வருமாறு:

31 – 12 – 87 இல் ஐந்தொகை

மூலதனம் மூர்த்தி	45 000	மோட்டார்	51 000
கீர்த்தி	35 000	தளபாடம்	19 000
நடைமுறைகணக்கு மூர்த்தி	6 000	சரக்கு	25 000
கீர்த்தி	4 000	கடன்பட்டோர்	30 000
வங்கிமேலதிகப்பற்று	2 000	காசு	5 000
கடன் கொடுத்தோர்	23 000		
மூர்த்தி கடன்கணக்கு	15 000		
	130 000		130 000

கலைப்பின் பொருட்டு நிலையான சொத்துக்கள் யாவற்றையும் 78000 ரூபாவிற்கு பணமாக்கினர். சரக்கு 26 000 ரூபாவிற்கு விற்கப்பட்டது. கடன்பட்டோரில் 1500 ரூபா அறவிடமுடியாக்கடனுகும். செல்மதியாளர்க்கு 22000 ரூபா கொடுத்துக்கடன் தீர்க்கப்பட்டது. வங்கி மேலதிகபற்றையும் கலைப்பு செலவுக்கு 1300 ரூபாவும் பங்குடைமை கொடுத்தது. பின்வருவனவற்றை தயார் செய்யவும்

1) தேறியபணக்கணக்கு 2) பங்காளர் மூலதனக் கணக்கு
3) காசுக்கணக்கு

6. ரவி, புவி ஆகிய இருவரும் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவர். 31-12-88 ல் இவர்களின் ஐந்தொகை பின்வருமாறு இருந்தது.

31-12-88 ல் ஐந்தொகை

மூலதனம் ரவி		40 000	இயந்திரம்		18 000
புவி		20 000	மோட்டார்	20 000	
பொது ஒதுக்கம்		4 000	பெ. தே. ஒது	3 000	17 000
கடன் கொடுத்தோர்		8 000	முதலீடுகள்		15 000
8% குமார் கடன்		7 000	கடன்பட்டோர்	12 000	
கடன் வட்டி நிலுவை		1 000	அ.மு.ஒது	2 000	10 000
			கையிருப்பு		12 000
			காசு		8 000
		80 000			80 000

மேற்படி திகதியில் பங்குடைமை கலைக்கப்பட்டது. இயந்திரம், கையிருப்புக்கள் முறையே 17400 ரூபாவிற்கும் 12200 ரூபாவிற்கும் விற்கப்பட்டன. 8000 ரூபா கொள்விலையுள்ள மோட்டார் வான் ஒன்றை ரவி 8600 ரூபாவிற்கு எடுத்துக் கொண்டார். மற்றையது 11400 ரூபாவிற்கு விற்கப்பட்டது. முதலீடுகளைப் பங்காளர்கள் இலாபநட்ட விகிதப்படி எடுத்துக் கொண்டனர். கடன்பட்டோரிடம் இருந்து 11200 ரூபா தேறியது கடன் கொடுத்தோர்க்கு 5% கழிவு நீக்கி கணக்குத் தீர்க்கப்பட்டது. 8% குமார் கடனும் வட்டி நிலுவையும் கொடுக்கப்பட்டது. பின்வருவனவற்றைத் தயாரிக்கவும்

1) தேறியபணக் கணக்கு 2) காசுக்கணக்கு 3) பங்காளர் மூலதனக்கணக்கு

7. A.B.C ஆகிய பங்காளர்கள் இலாபநட்டங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிரும் பங்குடைமையின் பங்காளர்களாவர் 31.12.88 இல் இப்பங்குடைமையின் ஐந்தொகை பின்வருமாறு இருந்தது

31-12 88 ல் ஐந்தொகை

மூலதனம்	A	35 000	பொறி இயந்திரம்		45 000
	B	35 000	மோட்டார்	48 000	
	C	20 000	கழி: பெ:தே:ஒ	15 000	33 000
நடைமுறை			நன்மதிப்பு		18 000
க/கு	A 8 000		க.பட்டோர்	32 000	
	B 4 000		கழி.அ.மு.ஒது	2 000	30 000
	C (2 000)	10 000	சரக்கு		15 200
பொது ஒதுக்கம்		10 000	வங்கி		3 800
கடன் கொடுத்தோர்		35 000			
		1 45 000			1 45 000

1) புத்தகத்தில் 11 000 ரூபா பெறுமதியான மோட்டாரை A 9900 விலையில் ஏற்றுக்கொண்டார் மற்றய மோட்டார்கள் 24200 ரூபாவிற்கு விற்கப்பட்டது.

2) இருப்பு 19200 ரூபாவிற்கு விற்கப்பட்டது. வருமதியாளரில் 1200 ரூபா அறவிடமுடியாக்கடனாகும்.

3) காசைவிட மற்றய சொத்துக்கள் 69 700 ரூபாவிற்கு விற்கப்பட்டது.

4) கடன் கொடுத்தோரை 5% கழிவுடன் C பொறுப்பேற்றார்.

5) கலைப்புச் செலவாக 1000 ரூபாவும் நிகழத்தக்க பொறுப் பொன்றுக 1500 ரூபாவும் ஏற்பட்டது. பங்குடைமை கலைப்பு தொடர்பான கணக்குகளை செய்து காட்டுக.

8. வனசா நிறுவனத்தின் 31-12-88 இல் உள்ளவாறான ஐந்தொகை :

மூலதனக் க/கு		நிலையான சொத்துக்கள்	14 000
வனசா	10 000	நடைமுறை சொத்துக்கள்	
உமா	9 000	இருப்பு 6 800	
நடைமுறைக் க/கு		கடன்	
வனசா	1 900	பட்டவர்கள் 4 750	
உமா	1 700	காசு 150	11 700
கடன் கொடுநர்	3 100		
	25 700		25 700

பங்குடைமை 1-1-89 இல் கலைக்கப்பட்டது

அ) நிலையான சொத்தில் அடங்கியுள்ள மோட்டார் வாகனத்தை வனசா 2 000 ரூபா பெறுமதியிலும் உமா 3 000 ரூபா பெறுமதியிலும் எடுப்பதற்கு இணங்கிக்கொண்டார்கள்

ஆ) மீதியாக உள்ள நிலையான சொத்துக்கள் 12 000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது

இ) இருப்பு ஏலத்தில் 4 300 ரூபாவிற்கு விற்கப்பட்டது

ஈ) கடன்பட்டோர்களிடமிருந்து 4 600 ரூபா பெறப்பட்டது

உ) 5% கழிவு பெற்று கடன் கொடுத்தோருக்குரிய தொகை செலுத்தப்பட்டது

ஊ) கலைப்புச் செலவு 250 ரூபா ஏற்பட்டது

எ) பங்காளர்களுக்கிடையே இலாப நட்டத்தைப் பங்கிடும் விகிதம் 3 : 2 ஆகும்

விஞ : கலைப்புத் தொடர்பான தேறிய பணக் கணக்கையும் ஏனைய கணக்குகளையும் தயாரிக்குக.

9. ரவி, ரகு, ராஜ் ஆகிய மூவரும் 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிரும் பங்குடைமை நிறுவனத்தின் பங்காளர்கள்.

31-01-1987 அன்று அவர்களின் ஐந்தொகை பின்வருமாறு

மூலதனம்			**நிலையான சொத்துக்கள்**		
ரவி	50 000		காணிகட்டிடம்	65 000	
ரகு	30 000		மோட்டார் வான்	20 000	
ராஜ்	20 000	100 000	தளபாடம்	5 000	90 000
நடைமுறைக் கணக்கு			**நடைமுறைச் சொத்துக்கள்**		
ரவி	8 000		சரக்கிருப்பு	30 000	
ரகு	(3 000)		கடன்பட்டோர் 10 000		
ராஜ்	5 000	10 000	ஐயக்கடன் ஏற்பாடு 2 000	8 000	
ராஜ் கடன்		20 000	ரகு கடன்	10 000	
கடன் கொடுத்தோர்		12 000	காசு	8 000	56 000
வங்கி மேலதிகப்பற்று		4 000			
		146 000			146 000

1-4-1987 அன்று பங்குடைமை நிறுவனத்தைக் கலைக்க பங்காளர்கள் தீர்மானித்தார்கள். கலைப்புச் செலவு 5 000/- ஏற்பட்டது. தளபாடத்தின் ஒரு பகுதியை ராஜ் 3 000 மதிப்பிட்டும்; மோட்டார் வாகனத்தை ரகு 12 000 ரூபா மதிப்பிட்டும் ஏற்றுக்கொண்டனர். ரவி கடன் கொடுத்தோருக்கு பணம் கொடுத்துத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கடன்பட்டோரிடமிருந்து 1 000 ரூபா மட்டும் தேறவில்லை. காணி, கட்டிடமும் மிகுதித் தளபாடமும் 72 000 ரூபாவிற்கும் சரக்கிருப்பு 23 000 ரூபாவிற்கும் விற்கப்பட்டன. கலைத்தலின்போது 4 000 பெறுமதியான நிகழத்தக்க பொறுப்பு ஒன்றும் ஏற்பட்டது.

பின்வருவனவற்றைத் தயாரிக்குக்

1) தேறிய பணக் கணக்கு

2) மூலதனக்கணக்கு (நிரல் வடிவில்)

3) காசுக் கணக்கு

10. இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் பங்காளர்களான ராஜா, அருள், சுதன் ஆகியோரின் பங்குடைமையின் 31-12-87 இல் உள்ள ஐந்தொகை பின்வருமாறு:

மூலதனம்: ராஜா	80 000	
அருள்	60 000	
சுதன்	40 000	
நடைமுறைக் கணக்கு		
அருள்	4 200	
வங்கிக் கடன்	15 000	
சுதன் கடன்	19 000	
கடன் கொடுத்தோர்	9 500	
நின்ற செலவீடு	3 300	
	2 31 000	

	கொ. வி. (கிரயம்)	தேறிய பெறுமதி
இறையில் நிலம் கட்டடம்	1 00 000	1 00 000
பொறிகள்	75 000	46 000
மோட்டார் வாகனம்	60 000	28 000
தளபாடம்	25 000	19 000
	2 60 000	
சரக்கு		6 500
கடட்டோர்	7 500	
அ-மு. ஏ.	500	7 000
நடைமுறை க/கு:		
சுதன்		8 000
ராஜா		12 000
காசும் வங்கியும்		4 500
		2 31 000

1-1-88 இல் இப் பங்குடைமையைக் கலைக்க பங்காளர் தீர்மானித்தனர். சுதனின் கடனுக்காக தளபாடத்தை 17 000 ரூபா பெறுமதியில் கொடுத்ததுடன் மீதிக் கொடுப்பனவு காசாகக் கொடுக்கப்பட்டது. மோட்டார் வாகனத்தை 25000 ரூபா மதிப்பீட்டில் ராஜா ஏற்றுக் கொண்டார். கட்டிடமும் பொறியும் முறையே 115 000, 50 000 ரூபா தேறியது. கடன்பட்டோரில் 10% அறவிட முடியாத கடனாகியது. கடன் கொடுத்தோர் ரூபாவுக்கு 5 சதம் விட்டுக் கொடுத்ததுடன் ஏனைய கொடுப்பனவுகளும் கொடுத்துத் தீர்க்கப்பட்டன. ஏனைய கொடுப்பனவுகள் புத்தக விலையில் தேறின. கலைப்புச் செலவுக்காக 1 800 ரூபா செலவீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்படுகின்றீர்.

1) தேறிய பணக்கணக்கு

2) பங்காளர் மூலதனக்கணக்கு

3) வங்கிக் கணக்கு

11. பங்குடைமை வியாபாரமொன்றில் ஈடுபட்டுள்ள சுபேசன், சிலன், சங்கர் ஆகியோர் முறையே 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து கொள்கின்றனர். இவர்கள் 1988 டிசம்பர் 31 இல் தமது வியாபாரத்தைக் கலைக்கத் தீர்மானித்தனர். இத்திகதியிலான ஐந்தொகை கீழ்வருமாறு:

மூலதன கணக்கு:			
சுபேசன்	3 60 000	கட்டிடங்கள்	3 00 000
சிலன்	2 40 000	மோட்டார் வான்	2 10 000
சங்கர்	2 00 000	பொருத்துக்கள்	1 00 000
பொது ஒதுக்கம்	10 000	கடன் படுநர்	74 500
கடன் கொடுநர்	56 500	வங்கி மீதி	1 22 000
		கையிருப்பு	60 000
	8 66 500		8 66 500

பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

1) மோட்டார் வான்களில் ரூபா 120 000 ஏட்டுப் பெறுமதியுடையதை ரூபா 110 000 பெறுமதியில் சுபேசனும், மிகுதியான ஏட்டுப் பெறுமதியுடையதை ரூபா 95 000 பெறுமதியில் சிலனும் எடுத்துக் கொண்டனர்.

2) எஞ்சிய சொத்துக்கள் பின்வருமாறு தேறின.

கட்டிடங்கள் 315 000 ரூபா

பொருத்துக்கள் 98 000 ரூபா

கடன்படுநர் 71 600 ரூபா

கையிருப்பு 62 000 ரூபா

3) கடன் கொடுநரில் அரைப்பங்கு ரூபா 450 கழிவு பெற்றுக் காசு கொடுக்கப்பட்டதுடன் மிகுதியை சங்கர் பணம் கொடுப்பதாகப் பொறுப்பேற்றார்

நீர் தயாரிக்க வேண்டியவை

a) தேறிய பணக்கணக்கு

b) பங்காளர் மூலதனக் கணக்குகள்

c) வங்கிக் கணக்கு

12. இலாப நட்டங்களை சமனாகப் பகிர்ந்து கொள்ளும் பங்காளர்களான குமரன், வரதன், ஆனந்தன் ஆகிய பங்காளர்கள் தமது பங்குடைமை வியாபாரத்தை கலைத்துவிடத் தீர்மானித்தனர். கலைப்புத் திகதியான 1989 மார்ச் 31 இல் நிறுவன ஐந்தொகை பின்வருமாறு :

	ரூபா		ரூபா
மூலதன கணக்கு:		கட்டிடங்கள்	1 85 000
குமரன்	2 50 000	விநியோகவான்	1 15 000
வரதன்	2 00 000	அலுவலக உபகரணம்	1 00 000
ஆனந்தன்	1 50 000	கையிருப்பு	1 00 000
பொதுஒதுக்கம்	30 000	கடன் படுநர்	54 100
கடன் கொடுநர்	48 600	வருமதி உண்டியல்	36 200
சென்மதி உண்டியல்	33 500	வங்கி மீதி	1 21 800
	7 12 100		7 12 100

பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

1) அலுவலக உபகரணங்களை ரூபா 97 000 பெறுமதியில் வரதனும் வருமதி உண்டியல்களை ரூபா 34 600 பெறுமதியில் ஆனந்தனும் எடுத்துக் கொண்டனர்.

2) கடன்படுநரில் ரூபா 1400 அறவிடமுடியாக் கடனாகியதுடன் எஞ்சிய சொத்துக்கள் பின்வருமாறு தேறின.

கட்டிடங்கள் ஏட்டுப் பெறுமதிப்படி

விநியோகவான் 118 000 ரூபா

கையிருப்பு 97 000 ரூபா

3) கடன் கொடுநரிடம் ரூபா 1 500 கழிவு பெற்று காசு கொடுக்கப்பட்டதுடன், சென்மதி உண்டியல்களை குமரன் கொடுப்பதாக பொறுப்பேற்றார்.

நீர் தயாரிக்க வேண்டியவை

a) தேறிய பணக்கணக்கு

b) பங்காளர் மூலதனக் கணக்குகள்

c) வங்கிக் கணக்கு

13. சில்லறை வியாபாரமொன்றை நடாத்திவரும் ரேவதி, சுதா0 சுமதி ஆகியோர் முறையே 4: 3: 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிரும் பங்காளராவர். 1988 டிசம்பர் 31 இல் தமது பங்குடைமை வியாபாரத்தை ஒழிக்க முடிவுசெய்தனர். இத்தி கதியிலான ஐந்தொகை பின்வருமாறு:

மூலதன கணக்கு:			
ரேவதி	3 20 000	வியாபார நிலையம்	2 80 000
சுதா	2 40 000	மோட்டார் வான்	1 90 000
சுமதி	80 000	பொருத் துக்கள்	50 000
நடைமுறை கணக்கு:		20% முதலீடுகள்	30 000
ரேவதி	36 500	கையிருப்பு	49 600
சுதா	24 500	கடன் படுநர்	41 200
சுமதி	(10 000)	வங்கி மீதி	1 26 900
10 % வங்கிக் கடன்	40 000		
கடன் கொடுநர்	36 700		
	7 67 700		7 67 700

பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன

1) கையிருப்புக்களை ரூபா 54 000 பெறுமதியில் பங்காளர்கள் சமனுகப் பங்கிட்டுக் கொண்டனர்.

2) கடன்படுநரில் சுதாவினுல் பிணைநின்ற ஒருவரின் ரூபா 3 000 அறவிடமுடியாதிருந்ததுடன், எஞ்சிய கடன்படுநருக்கு ரூபா 800 கழிவு கொடுத்து பணம் பெறப்பட்டது

3) சொத்துக்கள் பின்வருமாறு விற்பனை செய்யப்பட்டது

	ரூபா
வியாபார நிலையம்	2 84 000
மோட்டார்வான்	1 87 000
பொருத்துக்கள்	49 500

4) முதலீடுகள் கடந்த 3 வருட கால வட்டியுடன் மீட்கப்பட்டதோடு வங்கிக்கடன் கடந்த 2 வருட கால வட்டியுடன் தீர்க்கப்பட்டன.

5) கடன் கொடுநரிற்கு ரூபா 34 900 பணம் கொடுத்து அவர்கள் கணக்குகள் முற்றுக தீர்க்கப்பட்டதோடு பங்குடைமை கலைப்பு செலவுக்கென ரூபா 4 000 கொடுக்கப்பட்டது.

பின்வருவனவற்றை தயாரிக்குக:

a) தேறிய பணக் கணக்கு

b) பங்காளர் மூலதனக் கணக்குகள்

c) வங்கிக் கணக்கு

14. இலத்திரனியல் வியாபாரமொன்றை நடாத்தி வரும் ஜோன் பீற்றர், நெல்சன் ஆகிய பங்காளர்கள் முறையே 5: 3: 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிரும் பங்காளராவர். 1987 டிசம்பர் 31 இல் கணக்கேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு;

கட்டிடமும், தேய்மான ஏற்பாடும்		3 16 000	1 12 000
மோ. வானும்	,,	1 84 000	68 000
பொருத்தும்	,,	1 75 000	43 000

கடன் படுநரும், கடன் கொடுநரும்		48 600	37 500
மூலதன கணக்கு:	ஜோன்		3 00 000
	பீற்றர்		1 80 000
	நெல்சன்		1 20 000
நடைமுறை க/கு:	ஜோன்	36 000	
	பீற்றர்		40 000
	நெல்சன்		36 000
ஆயுட் காப்புறுதி பூட்கை ஒதுக்கம்			38 000
,, ,, ,,	முதலீடு	38 000	
கையிருப்பு		49 000	
ஐயக் கடன் ஏற்பாடு			4 000
வங்கிக் கடன்			30 000
வங்கியிலுள்ள காசு		1 61 900	
		10 08 500	10 08 500

இத் திகதியில் வியாபாரத்தை முடிவுக்கு கொண்டு வர முடிவு செய்தனர். பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

1) பொருத்துக்களை ரூபா 1 25 000 பெறுமதியில் ஜோனும் கையிருப்புக்களை ரூபா 47 000 பெறுமதியில் நெல்சனும் எடுத்துக் கொண்டனர்.

2) ஆயுட் காப்புறுதி பூட்கை ரூபா 40 000 பெறுமதியில் கையளிக்கப்பட்டதுடன் கடன்படுநரில் ரூபா 2 000 அறவிடமுடியாக் கடனாகியது.

3) வங்கிக் கடன்கள் கடந்த 4 வருடகால வட்டியுடன் தீர்க்கப்பட்டதோடு கடன் கொடுநரை ஜோனும், பீற்றரும் சமனாகப் பொறுப்பேற்றனர்.

4) எஞ்சிய சொத்துக்கள் பின்வருமாறு தேறின:

கட்டிடங்கள் ஏட்டுபெறுமதிபடி

மோ. வான் 1 20 000 ரூபா

5) பங்குடைமை கலைப்புச்செலவுக்கென ரூபா 6 000 ம், நிகழ்த் தக்க பொறுப்பொன்று தொடர்பாக ரூபா 10 000 ம் செலுத் தப்பட்டது.

பின்வருவனவற்றை தயாரிக்குக!

a) தேறிய பணக்கணக்கு
b) பங்காளர் மூலதனக்கணக்குகள்
c) வங்கிக் கணக்கு

15. பாபு, கோபு, சோமு ஆகியோர் இலாப நட்டங்களை 5 : 3 : 2 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவர், 31-12-87 இல் இவர்களின் ஐந்தொகை பின்வருமாறு இருந்தது

31-12-87 இல் ஐந்தொகை

மூலதனம் : பாபு	23 000	நிலம் கட்டடம்	53 000
கோபு	22 000	தளபாடம்	27 000
பொது ஒதுக்கம்	3 000	சரக்கு	16 000
கடன் கொடுத்தோர்	69 000	க, பட்டோர் 6 800	
		கழி: அ.மு.எ. 200	6 600
		சோமு மூலதன	
		கு/கு	12 200
		காசு	2 200
	1 17 000		1 17 000

மேற்குறிப்பிட்ட திகதியில் பங்குடைமை கலைக்கப்பட்டது. நிலம் கட்டடம் 52 800 ரூபாவிற்கும் சரக்கு 17 000 ரூபாவிற்கு விற்கப்பட்டது. தளபாடத்தை 28 000 ரூபா விலையிட்டு பாபுவும் கோபுவும் இலாப நட்ட வீதப்படி பகிர்ந்துகொண்டனர். கடன் 3% கழிவுடன் தீர்க்கப்பட்டது. கடன்பட்டோரிடம் முழுத் தொகையும் பெறப்பட்டது. கலைப்பு செலவு 1 000 ரூபாவாகும்.

சோமு முறிந்தவன் எனக்கொண்டு கார்னர் எதிர்மறை தீர்ப்பைப் பின்பற்றி பங்குடைமைக் கலைப்புக் கணக்குகளைத் தயாரிக்கவும்.

16. இலாப நட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்களான அருண், நிர்மல், சதீஷ் ஆகிய பங்காளர்கள் தமது பங்குடைமை வியாபார அமைப்பை கலைக்கத் தீர்மானித்தனர். கலைப்புத் திகதியான 1989 யூன் 30 இல் ஐந்தொகை பின்வருமாறு:

மூலதனக்கணக்கு:		விநி. வான்	
அருண்	2 60 000	கொள்விலை 3 20 000	
நிர்மஷ்	1 40 000	தேய்மான	
சதீஷ்	1 00 000	ஏற்பாடு (70 000)	2 50 000
நடைமுறை க/கு:			
அருண்	48 000	பொருந்து	
நிர்மல்	42 000	கொள்விலை 2 80 000	
சதீஷ் (வரவு)	(40 000)	தேய்மான	
நிர்மல் கடன்	50 000	ஏற்பாடு (40 000)	2 40 000
கடன் கொடுநர்	36 000		4 90 000
வங்கிமேலதிகப் பற்று	14 000	கையிருப்பு	30 000
		க. பட்டோர் 54 000	
		ஐயக்கடன்	
		ஏற்பாடு (4 000)	50 000
		கையிலுள்ள காசு	80 000
	6 50 000		6 50 000

பின்வரும் விபரங்கள் தரப்படுகின்றன

1) ரூபா 90 000 கொள்விலையானதும் ரூபா 80 000 ஆக பெறுமதி குறைத்தெழுதப்பட்டதுமான விநியோகவான் ஒன்றை ரூபா 84 000 பெறுமதியில் சதீஷ் எடுத்துக் கொண்டார். எஞ்சிய மோட்டார் வான்கள் ரூபா 1 60 000 பெறுமதியில் தேறின.

2) கையிருப்புக்கள் ரூபா 33000/- ம் தேறியதுடன், கடன்பட்டோரில் ரூபா 3000 அறவிடமுடியாக் கடனாகியது.

3) நிர்மலின் கடனின் பொருட்டு ரூபா 53000 ஏட்டுப்பெறுமதியுடைய பொருத்தை ரூபா 48 000 பெறுமதியில் கொடுத்து அவர்கடன் முற்றாக தீர்க்கப்பட்டதுடன் எஞ்சிய பொருத்துக்கள் ரூபா 195000 பெறுமதியில் தேறின.

4) வங்கி மேலதிகப் பற்று ரூபா 3000 வட்டியுடன் தீர்க்கப் பட்டதுடன் கடன்கொடுத்தோரிற்கு ரூபா 35000 கொடுத்து கணக்குகள் தீர்க்கப்பட்டன.

5) பங்குடைமை கலைப்பு செலவு தொடர்பாக ரூபா 8000 ம் நிகழத்தக்க பொறுப்பு ஒன்று தொடர்பாக ரூபா 16000 ம் செலுத்தப்பட்டது.

நீர் தயாரிக்கவேண்டியவை:-

1) தேசிய பணக்கணக்கு

2) பங்காளர் மூலதன கணக்குகள்

3) காசுக் கணக்கு

17. இலாபநட்டங்களை முறையே 2: 2: 1 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்களான ரமணர், அரவிந்தர், ரஜனீஷ் ஆகிய பங்காளர் களால் தமது பங்குடைமை வியாபாரத்தை கலைக்கத் தீர்மானித் தனர். 1989 மார்ச் 31 இல் ஐந்தொகை பின்வருமாறு:

மூலதனக் கணக்கு:			
ரமணர்	1 60 000	மோட்டார்வான்	1 80 000
அரவிந்தர்	1 40 000	அலுவலக உபகரணம்	1 00 000
ரஜனிஷ்	50 000	ஒவ்வொன்றும் 10/-	
கடன் கொடுநர்	48 000	ஆன × கம்பனியிலான	
சென்மதி உண்டியல்	32 000	6 000 பங்கு மூதலீடு	58 000
		கையிருப்பு	32 000
		வங்கியிலுள்ள காசு	60 000
	4 30 000		4 30 000

பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன

1) ரூபா 60 000 ஏட்டுப்பெறுமதியான மோட்டார்வான்களை ரஜனீஷும், 40 000 ஏட்டுப்பெறுமதியான அலுறலக உபகர ணங்களை ரமணரும் எடுத்தனர் எஞ்சிய சொத்துக்கள் பின் வருமாறு தேறின

	ரூபா
எஞ்சிய மோட்டார்வான்	1 24 000
,, அலுவலக உபகரணம்	58 000
கையிருப்பு	35 000
மூதலீடுகள்	66 000

2) கடன் கொடுநருற்கு 5% கழிவுபெற்று பணம் செலுத்தப்பட்டதுடன், சென்மதி உண்டியல்களை அரவிந்தர் பணம் கொடுப்பதாக பொறுப்பேற்றார்.

3) ரஜனிஷ் தன்னை வர்கயற்றவர் எனவெளிப்படுத்தினர். இவர் தொடர்பான நட்டம் ஏனைய பங்காளர்களரல் இலாபநட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

நீர் தயாரிக்க வேண்டியவை:

1) தேறிய பணக் க/கு

2) பங்காளர் மூலதனக் க/குகள்

3) வங்கிக் க/கு

18. இலாப நட்டங்களை முறையே 5: 3: 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிரும் பங்காளர்களான வசந்தி, சுகந்தி, மாலா என்போரினுடைய பங்குடைமை வியாபாரத்தின் 31-3-1989 ஐந் தொகை கீழ்வருமாறு:

மூலதனக் கணக்கு:		பொறித் தொகுதி	3 30 000
வசந்தி	2 00 000	மோட்டார்	1 20 000
சுகந்தி	2 00 000	பொருத்துக்கள்	60 000
மாலா	1 00 000	கையிருப்பு	50 000
நடைமுறைக் கணக்கு:		கடன் படுநர்	80 000
வசந்தி	48 000	வங்கியிலுள்ள காசு	20 000
சுகந்தி	42 000	மாலா நடைமுறைக்க/கு	50 000
வசந்திகடன்	40 000		
கடன்கொடுநர்	46 000		
சென்மதி உண்டியல்	34 000		
	7 10 000		7 10 000

பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

1) பொருத்துக்களை ரூபா 64 000 பெறுமதியில் மாலாவும், கையிருப்புக்களை ரூபா 48 000 பெறுமதியில் சுகந்தியும் எடுத்துக் கொண்டதுடன், கடன் படுநருக்கு ரூபா 1 000 கழிவு கொடுத்துப் பணம் பெற்றதுடன், எஞ்சிய சொத்துக்கள் பின்வருமாறு விற்பனை செய்யப்பட்டது.

	ரூபா
பொறித்தொகுதி	3 37 000
மோட்டார்	1 13 0 0

2) கடன் கொடுநருக்கு ரூபா 45 000ம் கொடுத்து கணக்கு முற்றுகத் தீர்க்கப்பட்டதுடன், சென்மதி உண்டியல்களிற்கு தாம் பணம் கொடுப்பதாக வசந்தியும், சுகந்தியும் பொறுப்பேற்றனர்.

3) பங்குடைமை கலைப்புச் செலவு தொடர்பாக ரூபா 10 000 செலுத்தப்பட்டது.

4) மாலா தன்னை முறிவுற்றவரென வெளிப்படுத்தியுள்ளார்.

தயாரிக்குக :

1) தேறிய பணக் க/கு

2) பங்காளர் மூலதனக் க/குகள்

3) வங்கிக் க/கு

19. கௌரி, மதி, ஜேம்ஸ் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3 : 2 ; 1 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளராவர். ஜேம்ஸ் முறிவுற்றமையினால் தமது வியாபாரத்தை கலைக்க முடிவுசெய்தனர். கலைப்புத் திகதியான 1989 ஜூன் 30 இல் நிறுவன ஐந்தொகை கீழ்வருமாறு;

மூலதன கணக்கு			
கௌரி	2 60 000	கட்டடங்கள்	1 60 000
மதி	2 40 000	மோட்டார் வான்	1 00 000
ஜேம்ஸ் (வரவு)	(500 00)	பொருத்து	90 000
	4 50 000		3 50 000
கௌரி கடன்	40 000	கையிருப்பு	48 000
கடன் கொடுநர்	46 000	கடன்படுநர்	52 000
சென்மதி உண்டியல்	34 000	வங்கி	1 20 000
	5 70 000		5 70 000

பின்வருமாறு தகவல்கள் தரப்படுகின்றன

1) கௌரியின் கடனின் பொருட்டு பொருத்துக்களில் அரைப் பங்கு ரூபா 39 000 பெறுமதியில் கையளிக்கப்பட்டதுடன் எஞ்சிய பொருத்துக்கள் ரூபா 48 000 தேறியது.

2) கடன்படுநரில் மதியிலுல் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த ரூபா 4 000 பெறுமதியான தொகை அறவிடமுடியாதுபோக மிகுதி கடன்படுநருக்கு ரூபா 2 000 கழிவு கொடுத்து பணம் பெறப்பட்டது

